Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்


பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-18 31-01-2005 திங்கட்கிழமை ஓசை -348


கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11118)

## அனுதாபத்திற்குரியவர்களாகத் தமிழர் இருப்பதை தேசியத் தலைவர் ஏற்றுக்கொண்டதில்லை!

### நோர்வேயில் போராளி வீரா



தமிழினம் உலகின் அனுதாபத்திற்குரிய இனமாக இருப்பதைத் தலைவர் அவர்கள் ஒரு காலமும் ஏற்றுக் கொண்டதில்லை ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை. இழப்புகளும் இன்னல்களும், அழிவுகளும் எமது போராட்டத்தில் பாய்ச்சலை ஏற்படுத்தியது என்பது தான் வரலாறு என நிதர்சனம் நிறுவனத்தைச் சேர்ந்த வீரா தெரிவித்துள்ளார்.

கடலிலே காவியமான மூத்த தளபதி கேணல் கிட்டு லெப். கேணல் குட்டிசிறி உட்பட்ட பத்து வீரவேங்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## 7000 கோடி ரூபா கடனில் மூழ்கியுள்ள மின்சாரசபை

மின்சார சபை 7000 கோடி மீளச் செலுத்த வேண்டிய கடன் நிலுவை இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இதன்காரணமாகவே இலங்கை மின்சார சபையை தனியார் மயமாக்கும்முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக மின்சாரசபை ஊழியர்களின் தொழிற்சங்கம் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. 300 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் மிக்க மேல் கொத்மலை திட்டத்தையும் 130 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் மிக்க நுரைச்சோலை திட்டத்தையும்நடைமுறைப்படுத்தினால் இந்தக் கடனை அடைத்துவிடமுடியும் என்றும்தொழிற்சங்க வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (32)

### சிறிலங்கா சுதந்திரக் கட்சி

# இன்னுமொரு முறை உடன்பாட்டை மீறின் அரசிலிருந்து வெளியேற ஜே.வி.பி. முடிவு!

### ஜே.வி.பி. மத்திய குழுவில் தீர்மானம்

(கொழும்பு)

**தம்முடனான ஒப்பந்தத்தை மீண்டும் ஒரு முறை மீறினால் அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்வது என ஜே.வி.பி. முடிவெடுத்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கட்சியின் அரசியல் உயர்பீட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தான்தோன்றித்தனமான எடுக்கும் முடிவுகளுக்கு. ஜே.வி.பியின் அரசியல் உயர்மட்டக் குழவில் ஒரு போதும் ஒத்துழைக்கப் போவதில்லை எனவும், இதுபற்றி விரைவில் பொது மக்களுக்கு அறிவிக்க ஜே.வி.பி. மத்திய குழு தீர்மானித்துள்ளது. கடந்த புதன்கிழமை இது பற்றி ஊடகங்களுக்கு தெரிவிக்க ஜே.வி.பி முடிவெடுத்திருந்த போதும், பின்னர் அது கைவிடப்பட்டது. எனினும் அக்கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஊடகங்களுக்கான அறிவித்தலை விரைவில் வெளியிட முடிவெடுத்து இருப்பதாகவும், இவ்வாறான ஒரு பத்திரிகையாளர் மாநாடு சந்திரிகா ஆட்சி அமைக்கப்பட்ட ஒன்பது மாதங்களில் ஜே.வி.பியினால் கூட்டப்படும் முதலாவது மாநாடாகவும் இருக்கும் எனவும் தெரிய வருகின்றது.

## வீரவணக்கக் கூட்டமும் நினைவுக்கல் திரை நீக்கமும்

2000 ஆம் ஆண்டு ஓயாத அலைகள் மூன்று இராணுவ நடவடிக்கையின் போது வீரச்சாவை தழுவிக்கொண்ட வீரவேங்கை பாவலன் அவர்களுடைய திருவுருவப்படம் அவருடைய தற்காலிக முகவரியான விசுவமடு இல்லத்தில் வைக்கப்பட்டு, இன்று காலை 9.00 மணிக்கு விசுவமடு மாவீரர் மண்டபத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்படும்.

## சுனாமி நிவாரணப்பொதி என்ற போர்வையில் சட்டவிரோதப் பொருட்கள் வருகின்றனவா?

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

சுனாமி அனர்த்த நிவாரணப் பொருட்கள் என்ற போர்வையில் சில தொண்டர் அமைப்புக்கள் சட்ட விரோதப் பொருட்களை கொண்டு வருவதாக புத்தசாசன மற்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

மத்தியமாகாணத்தில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு நன்றி செலுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சட்டவிரோதமாக இலங்கைக்குப் பொருட்களை கொணடு வரும் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதாக அவர் கூறியுள்ளார்.

நிவாரணம் என்று சொல்லிக் கொண்டுசில நிறுவனங்கள் குண்டு துளைக்காத ஆடைகள் மற்றும் ஹெலிகொப்டர்கள் சத்திவாய்ந்த தொடர்பாடல் உபகரணங்கள் போன்றவற்றை யார் இங்கு கொண்டு வரச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி.யின் மீட்புப் பணிகளுக்கு சுதந்திரக் கட்சி தடையாக உள்ளது

### ஜே.வீ.பீ.யீனர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பில் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட 50 தொழிலாளர்களையும் அங்கு செல்லவிடாமல் இலங்கை மின்சார சபை தடைசெய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. காலி துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்கு தமது 1000 உறுப்பினர்கள் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் துறைமுக அதிகார சபையால் இதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்றும் ஜே.வி.பி தரப்பு தெரிவித்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர் ஒருவர் நீர்கொழும்பில் சுட்டுக்கொலை

நீர்கொழும்புப் பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெனடிக்-றீகன் என்ற 23 வயதுடைய இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாக பொலிசார் தெரிவித்தனர். இவர் நீர்கொழும்பு எத்துக்கால பகுதியிலுள்ள தமது உறவினரின் வீட்டிற்கு நேற்றிமுன்தினமிரவே வந்து தங்கியிருந்தவர் என்றும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. நேற்று அதிகாலை 12.50 அளவில் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை இருவர் மேற்கொண்டதாக நீர்கொழும்பு தலைமையக பொலிஸ் இன்ஸ்பெக்ஸ்ரடர் தெரிவித்தார். துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவர்கள் வானொன்றில்

(12ஆம் பக்கம் பார்க்க)

### எரிக்குடன் சந்திப்பு

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நோர்வே நாட்டின் இலங்கையின் சமாதான ஏற்பாட்டாளரான எரிக்சூல் ஹெய்மை சந்தித்து உரையாடினார். இதன் போது இலங்கையின் சமாதான நகர்வுகள் குறித்தும் சுனாமியின் பின்னர் அதன் மாற்றங்கள் குறித்தும் பேசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த சந்திப்

(12ஆம் பக்கம் பார்க்க)

### அம்பாறையில் இடம் பெயர்ந்தோர்

## பாடசாலைகளை விட்டு பலவந்தமாக வெளியேற்றம்

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு பாடசாலைகளில் தங்கியிருக்கும் மக்களை கட்டாயமாக வெளியேற்றும் நடவடிக்கைக்ள் மேற் கொள்ளப்படுவதாக மாவட்டத்தின் பாரளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் கவலை வெளியிட்டுள்ளார்.

அரச அதிகாரிகளால் பலாத்காரமாக அனுப்பப்படவுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தோருக்கான தற்காலிக முகாம்கள் முழுமைபடுத்தப்படவில்லை என்பதுடன் அடிப்படை வசதிகளும் பூர்த்தியாக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். அத்துடன் அரசினால் நாள் ஒன்றுக்கென வழங்கப்படும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

ஜெயந்திநகர், இல.73 இல் 1/2 ஏக்கர் காணி விற்பனைக் குண்டு. தொடர்புகளுக்கு வை.மகேந்திரராசா, இல.84 ஜெயந்திநகர். (5472)

### தவறவிடப்பட்டுள்ளது

வீரக்குட்டி ஜெயகாந்தன் என்பவரது தே.அ. இல:-793274823V சார. அனு.அட் இல: 009988484 முகவரி கொண்ட ஆவணங்கள் 29.01.2005 அன்று த.பு.கழகம் புதுக்குடியிருப்பிற்கும் புதுக்குடியிருப்பு A.G.A அலுவலகத்திற்கும் இடையில் சிவப்புடன் கறுப்பு கலந்த பேஸ் தொலைந்து விட்டது. சேர்ப்பிக்க வேண்டிய முகவரி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கைவேலி புதுக்குடியிருப்பு.(5667)


-புதுக்குடியிருப்பு, முத்தையன் கட்டில்

# இருவேறு விபத்துக்களில் இருவர் படுகாயமடைந்தனர்

புதுக்குடியிருப்பிலும், முத்தையன் கட்டுப் பகுதியிலும் இடம் பெற்ற இருவேறு வீதிவிபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். பலர் சிறுசிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். நேற்றுக் காலை புதுக்குடியிருப்பில் இருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்று கொண்டிருந்த உந்துருளியுடன் முல்லைத்தீவில் இருந்து புதுக்குடியிருப்பை நோக்கி வந்து கொண்டிருந்த உந்துருளி புதுக்குடியிருப்பு சிவன்கோயிலுக்கு அருகில் மோதிக்கொண்டன. இதில் 30 வயதுடைய வசி என்பவர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இச்சம்பவத்தில் நால்வர் சிறுசிறு காயங்களுக்கு உள்ளாகினர். இச் சம்பவம் இடம் பெற்ற இடத்திற்கு புதுக்குடியிருப்பு காவல் பணிமனையினர் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் தொடர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற இதேவேளை நேற்று பகல் 2 ஆம் கட்டை முத்தையன் கட்டுப் பகுதியில் இரண்டு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் முத்தையன் கட்டு இடது கரையைச் சேர்ந்த 52 வயதுடைய கனகராசா என்பவர் காயமடைந்து புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (08)

# முல்லை தே.எ.பேரவையின் முக்கிய கலந்துரையாடல்

முல்லை.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் முக்கிய கலந்துரையாடல் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பொதுச்சுடரை முல்லை. மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் ஏற்றி வைக்க, தேசியக் கொடியினை புதுக்குடியிருப்பு முள்ளியவளை பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன் ஏற்றிவைத்தார். இக் கூட்டத்தில் 2005 ஆம் ஆண்டிற்கான முல்லை.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயற்பாடுகள் பற்றிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டதுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல் தொடர்பான செயற்பாடுகள் பற்றிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டது. இதில் கோட்ட மட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். அத்துடன் முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் செல்வநாயகம் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கினர். இந்நிகழ்வு நேற்றுக்காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பில் உள்ள முல்லை.மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் இடம் பெற்றது.


## கண்ணீர் அஞ்சலி

திருமதி. சோதி இராசையா

(அளவெட்டி வடக்கு)

29.01.2005



ஈரைந்து மாதங்கள் கருவறையில் எமைச் சுமந்து
ஈன்று வந்து பாலூட்டி தாலாட்டி வளர்த்த அன்னையே!
நீயீன்ற மகவுகளை ஆளாக்கிவிட்டு
நீயின்று மறைந்தனையே எமைவிட்டு
நல்லாளாய் இல்லாளாய் பார்போற்ற வாழ்ந்தவளே!
இல்லார்க்கும் உள்ளாளாய் வாழ்ந்தவகை என்சொல்வோம்
சொல்லாக் காலன் உனைவந்து கவர்ந்தனனே.
சொல்லாத் துயர் தன்னில் நாம் கிடந்து தவிக்கின்றோம்
விருட்சமாக நீயிருந்து எமைச் சுமந்தாயே!
வேரறுந்து நாம் கலங்க தொலைதூரம் சென்றனையே!
"அம்மா, எனும் முன்னே கண்முன் வருபவளே
"அம்மா, என்றிங்கு இனி எவரை நாமழைப்போம்
சோறூட்டிய அன்னை உனக்கு வாய்க்கரிசி போடுகிறோம்
பாலூட்டிதாய் உனக்கு இறுதிப்பால் வார்க்கின்றோம்
இம்மையில் மீண்டும் என்றிங்கு நாம் காண்போம்?
மறுமையிலும் உம்மகவாய் பிறக்கின்ற வரம் கேட்போம்!
நடமாடும் தெய்வமாக கண்முன்னே வாழ்ந்தவளே
காணட்டும் உன் ஆத்மா என்நாளும் சாந்தி இங்கு!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! (சி-11232)

தகவல்
சிவகுமார்(மகன்)



## சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மீனவர்களுக்கான அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்ட கடந்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் ஆதரவுடன் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பினரால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மீனவர்களின் எஞ்சிய இயந்திரங்களும், உடைந்த படகுகளும் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படவுள்ளன.

இச்சேவையினைப் பெறவிரும்பும் மீனவர்கள் முல்லை மாவட்ட கடந்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கசமாசத் தலைவரூடாக உறுதிப்படுத்தி எமது அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்பு கொள்ளப்படவேண்டிய முகவரி.

தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு,
கடற்றொழிலாளர்களுக்கான
இலவசசேவை நிலையம்,
சிலாவத்தை, முல்லைத்தீவு.

(5668)



## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் – முல்லைத்தீவுக்கிளை

## பதவி வெற்றிடம்

### திட்ட இணைப்பாளர்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவுக் கிளையினால், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படுகின்ற செஞ்சிலுவைச் சங்க சுகாதார சேவையில் சேவையாற்றுவதற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தகைமையுடையவர்கள் எதிர்வரும் 09.02.2005 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் தங்கள் விண்ணப்பங்களை தகைமைச் சான்றிதழ்களின் நிழற் பிரதிகளுடன் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தகைமைகள்:-

01. க.பொ.த.(உ/த) பரீட்சையில்(விஞ்ஞானப்பிரிவு) மூன்று பாடங்களில் சித்தி,
02. ஆங்கிலம்/தமிழ் எழுத, பேச நன்கு தெரிந்திருத்தல் வேண்டும்.
03. சுயமாகத் திட்டங்கள் தயாரிக்கவும், செயற்படுத்தவும் தெரிந்திருத்தல் வேண்டும்.
04. இலங்கை செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.
05. வயதெல்லை 25-55 இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
06. அடிப்படைக் கணினி அறிவு இருத்தல் வேண்டும்.
07. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
08. உறவினரல்லாத இருவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

வைத்தியகலாநிதி து.வி.ஜெயகுலராஜா,
கௌரவ தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
முல்லைத்தீவுக் கிளை,
புதுக்குடியிருப்பு.

(சி.11230)

# 50 ஆண்டுகளின் பின் ஈராக்கில் பொதுத் தேர்தல்

# பாதுகாப்பு மத்தியில் 72 வீதமானோர் வாக்களித்தனர்

## வாக்கு எண்ணும் பணி இன்று ஆரம்பம்



ஈராக்கில் நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் பெண்கள்

(பாக்தாத்)

**ஈராக்கில் தீவிரவாதிகளின் கடும் எதிர்ப்புக்களின் மத்தியிலும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்றையதினம் பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெற்றுள்ளது.**

நேற்று நடைபெற்ற இந்தப் பொது தேர்தலில் 275 ஆசனங் களைப் பெறுவதற்காக நூற்றிற்கும் அதிகமான கட்சிகளும் ,கூட்டமைப் புக்களும் ஆட்சிப் பொறுப்பை பெறும் நோக்கில் போட்டி இட்டுள்ளன. எழுபத்தி இரண்டு வீத வாக்களிப்பு நடை பெற்ற இந்தத் தேர்தல் வாக்குகள் எண்ணும் பணிகள் இன்று தொடக்கம் ஐந்து நாட்கள் நடைபெற்று பெப்ரவரி மாத ஆரம்பத்தில் முடிவுகள் அறிவிக் கப்படு மெனவும் இதில் வெற்றி பெறும் கட்சிகளின் ஆதர வுடன் மார்ச் மாத ஆரம்பத்தில் ஈராக் கிற்கான புதிய பிரதமர் தெரிவு செய்யப்பட்டு மார்ச் மாத இறுதியில் ஈராக்கின் புதிய அர சாங்கம் அமைக்கப்படுமென ஈராக்கிய தேர்தல் ஏற்பாட்டாளர் கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தேர்தல் வாக் களிப்பின் போது ஏற்பட்ட குண்டுத் தாக்குதல்களில் 19 பேர் உயிரிழந் துள்ளதாவும் ஒன்பது தற்கொ லைத் தாக்குதல் நடைபெற்ற தாகவும் செய்திகள் தெரிவிக் கின்றன.





ஈராக்கில் நேற்று நடைபெற்ற தேர்தலில் பாஸ்ரா நகருக்கு வாக்களிக்க வந்த மக்களையும் மொசூலில் வாக்களிக்கக் காத்திருக்கும் பெண்களுக்கு பாதுகாப்பளிக்கும் ஈராக் படையினரையும், படங்களில் காணலாம்

# சூப்பர் ஜம்போ ஏ.380 விமானத்தை வாங்குவதற்கு பல நாடுகள் போட்டி

(பாரிஸ்)

பிரான்ஸ் விமானக் கம்பெனி 850 பயணிகளை ஏற்றிச்செல்லும் சூப்பர் ஜம்போ ஏ 380 என்ற ஏர் பஸ் விமானத்தை தயாரிக்கிறது. சமீபத்தில் இந்த விமானத்தின் அறிமுக விழா கோலாகலமாக நடைபெற்றது. பயணிகள் விமா னத்தில் அதுவே உலகில் மிகப் பெரிய விமானம் என்ற பெருமை யையும் பெற்றுள்ளது.

இந்த சூப்பர் ஜம்போ விமா னத்தை வாங்க பல நாடுகள் போட்டி போடுகின்றன.

164 விமானங்களுக்கு ஏற்கனவே கேள்விகள் குவிந்து விட்டது. தற்போது சீன நாட்டைச் சேர்ந்த ''சதர்ன் ஏர்லைன்ஸ்'' என்ற விமானக் கம்பெனி 5 விமானங்களு க்கு கட்டளை கொடுத்துள்ளது.

# ரஷ்யாவில் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்பது ராணுவத்தினர் ஸ்தலத்தில் பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவில் செசன்லா பகுதி யில் ராணுவத்துக்கும், தீவிர வாதிகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல்கள் நடந்து வருகிறது. இந்த நிலையில் காயுகாசுங் செல்லும் நெடுஞ் சாலையில் ராணுவ வாகனங் களில் வீரர்கள் சென்று கொண்டி ருந்தனர்.

அப்போது வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது. இதில் ராணுவ வீரர்கள் 9 பேர் பலியானார்கள்.

# செப்ரெம்பர் 11 தாக்குதல் போன்று மீண்டுமொரு தாக்குதல் நிகழலாம்

## அமெரிக்க உள்துறை பாதுகாப்பு அமைச்சர்

(வோஷிங்டன்)

''அமெரிக்காவில் மீண்டும் தீவிரவாதிகள் தாக்கும் அபாயம் உள்ளது'' என்று அமெரிக்க உள் நாட்டு பாதுகாப்பு அமைச்சர் தெரி வித்துள்ளார்.

அமெரிக்க உள்நாட்டு பாதுகாப் பமைச்சராக இருப்பவர் டாம் ரிட்கி சனாதிபதி ஜோர்ஜ் புஷ் மீண்டும் பதவி ஏற்றத்தைத் தொடர்ந்து நிர்வாகத்தில் சில மாற்றங்களைச் செய்து உள்ளார். இதனைத் தொடர்ந்து உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சராக மைகேல் சொர்டுப் நியமிக்கப்பட்டார்.

பதவி விலக இருக்கும் அமைச்சர் டாம்ரிட்கி நிருபர்க ளுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி நடந்தது போல மீண்டும் தாக்குதல் நடக்க வாய்ப்பு உள்ளது. இதை ஓரளவு உறுதியாகக் கூறலாம்.


இந்தத் தாக்குதலை பின் லேடன் தலைமையிலான அல்-ஹையிதா இயக்கமோ அல்லது இது போன்ற தீவிரவாத இயக் கமோ நடத்தலாம். அல்-ஹைய் தாவைப்போன்ற தீவிரவாத இயக் கங்கள் உலகின் பல பாகங் களிலும் இருக்கிறார்கள். அவர் களும் அதே குறிக்கோளுடன் இயங் குகிறார்கள். ஈராக்கில் தற்போது நடைபெறும் தாக்குதல்கள் இது போன்றது தான். இவ்வாறு டாம்ரிட்கி கூறினார்.

''இந்தத் தாக்குதல் எந்த வகையில் இருக்கும் என்று எதிர் பார்க்கிறீர்கள்''? என்று நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு அவர் பதில் அளிக் கையில் ''ரசாயன ஆயுதம் அல்லது அணுகுண்டு தாக்கு தலாக அது இருக்கக் கூடும். மிகப் பெரிய உயிர் இழப்பை ஏற்படுத் தலாம். தீவிரவாதிகளுக்கு அணு ஆயுதங்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அவற்றை தாக்கு தலுக்கு பயன்படுத்துவார்கள்'' என்றார்.

நடைபெற்று முடிந்த தேர்தலில் ஜோர்ஜ் புஷ்சுக்கு ஆதரவாக உள்துறை செயற்பட்ட தாக குற்றம் சாட்டப்படுகிறதே? என்று கேட்டதற்கு ''உள்நாட்டு பாதுகாப்பு துறையில் அரசிய லுக்கு இடமில்லை'' என்றார்.

# பங்களாதேஷில் குண்டுவெடிப்பின் எதிரொலி பல நகரங்களில் வன்முறை, கதவடைப்பு



(டாக்கா)

பங்களாதேஷத்தில் எதிர்க் கட்சியான அவாமி லீக் கட்சி நடத்திய பேரணியில் குண்டு வெடித்தது. அக்கட்சியின் முன்னணித் தலைவர் உட்பட 5 பேர் இறந்தார்கள். 70 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து 3 நாள் கதவடைப் புக்கு எதிர்க்கட்சிகள் அழைப்பு விடுத்தன. இதன்படி நேற்று முன் தினம் முழு அடைப்பு தொடங் கியது.

டாக்கா நகரில் அனைத்துக் கடைகளும், வியாபார நிறுவனங் கள், பள்ளி, கல்லூரிகள் மூடிக்கிடந்தன. குறைந்த அளவி லேயே பஸ்களும், மற்ற வாகனங் களும் ஓடின. இதனால் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டது. கவச உடை அணிந்த பொலிசார் ரோந்து சுற்றி வந்தார்கள்.

டாக்கா உட்பட சில முக்கிய நகரங்களில் வன்முறை சம்ப வங்கள் நடந்தன. கட்சித் தொண் டர்கள் மோதிக்கொண்டார்கள். டாக்கா நகரில் பொலிஸ் வாகனம் அடித்து நொருக்கப்பட்டது. இதனால் பொலிசார் தடியடி நடத்தி கூட்டத்தினரை கலைத்தனா.

# எண்ணெய் உற்பத்தியில் மாற்றமில்லை ஒபேக் நாடுகளின் கூட்டத்தில் தீர்மானம்

வியன்னாவில் நேற்று நடை பெற்ற ஒபேக் நாடுகளின் அமைச் சர்கள் மட்டத்திலான கூட்டத்தின் பின்னர் ஈரான், குவைத், நைஜீ ரியா ஆகிய நாடுகளின் பிரதி நிதிகள் நடத்திய பேச்சுக்களின் போது எண்ணெய் உற்பத்தியில் எந்த விதமாற்றத்தையும் ஏற்படுத் துவதில்லைஎன்று தீர்மானித் துள்ளனர் .

உலகின் உச்சகட்ட எண்ணெய் உற்பத்தி நாடான சவுதியரேபியா வும் இதற்கு உடன்பாடு தெரிவி த்துள்ளது. ஒபேக் அமைப்பின் பேச்சாளர் ஒருவர் தகவல் தருகை யில் ,கெய்ரோவில் டிசம்பர் மாதத தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும் என்று குறிப்பிட்டார். மாரிகாலத்தை யொட்டி எண்ணெய் விலை வீழ்ச்சியடையுமானால் அதனைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படு மென்றும் அவர் மேலும் தெரிவித் தார்

### தீவிரவாதிகள் தாக்குதல்

(லாகூர்)

பாகிஸ்தானின் கிழக்கு பஞ்சாப் மாகாணத்தில் எரிவாயு விநியோகம் செய்யும் குழாயை தீவிரவாதிகள் வெடிவைத்துத் தகர்த்துள்ளனர்.

லாகூர் நகரின் தெற்கே 130 கி.மீ தொலைவில் உள்ள படோகி அருகே வெள்ளிக் கிழமை இரவு இந்தச் சம்பவம் நடந்தது.



அழகுச் சிலை, மெழுகுச் சிலை, இவற்றை பார்த்து பழக்கப்பட்ட கண்களுக்கு இந்த வெண்கலச் சிலை பயமுறுத்தலாக இருககிறது. ஆஸ்திரியாவின் பிரிகென்ஸ் நகரில் வித்தியாசமான சிற்பக் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இதில் இங்கிலாந்து நாட்டின் சிற்பக் கலைஞர் ஜேக் சேப்மேன் வெண்கலத்தால் ஆன சிற்பத்தை உருவாக்கி இருக்கிறார். பட்டுப்போன மரத்தில் மனித எலும்புக்கூடுகள் தொங்குவது போல் அவர் அமைத்துள்ள இந்த சிற்பம் விக்ரமாதித்தன் கதையை நினைவுபடுத்துகிறது.



மாலை தீவில் சுனாமி பாதிப்பிற்குப் பின்னர் நேற்று முதன்முதலாக பாடசாலை திறக்கப்பட்டு பாடசாலைக்கு சமுகமளித்த பாடசாலைச் சிறார்கள்.

# இடம் பெயர்ந்தோருக்கான உலருணவு நிவாரணத்தை தொடர்ந்தும் பெற்றுக்கொடுக்க கிளி.அரச அதிபர் முயற்சி!

## - பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் அவலம்

(அலுவலக செய்தியாளர்)

**மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப் பெற்று தற்போது நிறுத்தப் பட்ட உலர் உணவுப் பொருட்களை மேலும் ஒருவருடத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை கிளி. மாவட்ட அரச அதிபர் தி.இராச நாயகம் மேற்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.**

மீளக்குடியமர்ந்து இடம் பெயர்ந் தோர்க்கான உலர் உணவுப் பொருட களைப் பெற்று வந்த மக்களது நிலை மையினை கருத்திற் கொண்டு இவா களுக்கு நிறுத்தப்பட்டுள்ள மேற் படி உலருணவுப் பொருட்களை மேலும் ஒரு வருடத்திற்கு வழங்கு வதற்கான அனுமதியினை அரச அதிபர் கோரியுள்ளதாகவும் இதற் கான தொடர் முயற்சிகள் நடை பெற்று வருவதாகவும் புனர்வாழ்வு அமைச்சினால் இதற்காக அனுமதி கிடைக்கப்பெறும் பட்சத்திலேயே நிறுத்தப் பெற்ற உலர் உணவினை மீண்டும் மக்களுக்கு வழங்க முடியு மெனவும் தெரிவித்துள்ளார்.

மீளக் குடியமர்ந்த குடும்பங் களுக்கு ஜீவனோபாயக் கொடுப் பனவாக ரூபா 25,000 வழங்கப் பட்ட குடும்பங்களுக்கு 15 மாதங் களுக்கு மட்டுமே மேற்படி கொடுப் பனவினைப் பெற்ற குடும்பங் களுக்கு இடம்பெயர்ந்தோர்க்கான உலருணவு வழங்க முடியுமென அமைச்சு தீர்மானித்துள்ளது. இதன் காரணமாக இவ்வாறான குடும்பங் களுக்கு உலர் உணவு வழங்கு வதற்கான நிதி ஒதுக்கீடுகள் வழங் கப்படவில்லை. எனவே ஜீவனோ பாயக் கொடுப்பனவாக ரூபா 25,000 ரூபாவினை முழுமையாகப் பெற்ற மாதத் திலிருந்து 15 மாதங்கள் முடி வடைந்த குடும்பங்களுக்கு உலருணவு வழங்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவித் துள்ளார்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு ஜீவனோபாயக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ள நிலையில் இதனூடாக அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பக் கூடிய ஏது நிலை காணப்பட வில்லை. இதற்கு அடுத்த கட்டமாக எந்த உதவிகளும் சிறிலங்கா அரசி னால் இப்பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படாத நிலையில் உலர் உணவு நிவாரணம் அரசால் நிறுத் தப்படுவதென்பது இம் மக்களை மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாக்கி யுள்ளதென்பது குறிப்பிடத்தக்க தாகும் . (சோ)

## பதிவாளருக்கு நிரந்தர இடம்

முல்லை மாவட்ட அரசஅதிபர் தனது காரியாலயத்தில் இடத்தை வழங்கியதால் கடந்த 24.01.2005 தொடக்கம் மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகம் இயங்கு கின்றது. சுனாமியினால் பாதிக்கப பட்ட மக்கள் பதிவினை மேற்கொள்ளு மாறு முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா-சுகுமார் கேட்டுக் கொள்கின்றார். (20)




கிளிநொச்சிகாக்காகடைச்சந்தியிலிருந்துவட்டக்கச்சிமற்றும்திருவையாறு பகுதிகளுக்குச் செல்லும் பிரதான வீதியிலுள்ள கிளிநொச்சி குளப் பாலத்தின் நடுப்பகுதி மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளது. பாலத்தின் மேற்பரப்பு சுமார் அரையடிக்கும் கூடுதலாகத் தாழ்ந்து போயுள்ளது இது குறித்து சம்பந்தப்பட்டோர் கவனத்தில் கொள்ளு மாறு வேண்டப்படுகின்றனர். குறித்த சந்தியிலிருந்து பாலம் வரையான வீதி அண்மையிலேயே நல்லமுறையில் புனரமைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்ததும் சுட்டிக்காட்டத்தக்கது. (படம்.வரன்)

## சுனாமியால்தொழில் பாதிப்புக்குள்ளானோருக்கு முல்லைத்தீவில் இலங்கை வங்கி இலகு கடன்வழங்கும்

முல்லைத்தீவில் தொழில் ரீதியாக சுனாமியால் பாதிக்கப்பட்டவர் களுக்கு இலங்கை வங்கி இலகு கடனை வழங்க முன்வந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர் தெரிவித்தார். கடன்பெற்ற நாளிலிருந்து 12 மாதங்களுக்கு வட்டியில்லையென்றும் அதன் பிற்பாடு 6 வீதமான வட்டியே இப் பணத்திற்குப் பெறப்படும் எனவும் 1 இலட்சத்திலிருந்து 5 மில்லியன் வரை கடனைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

விவசாயம் தவிர்ந்த ஏனைய சகல தொழில்களை மேற்கொண் டோர் இந்த இலகு கடனைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் மேலும் தெரிவித்தார். சுனாமியால் தொழில் முயற்சியினை இழந்தவர்கள் இக் கடனைப் பெற்று தொழில்துறையினை வளர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். (20)



கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஆண்டு ஒன்று மாணவர்களின் புகுமுகவிழாவின் போது..... (படம் வரன்)

## -பொருண்மிய மதியுரையகத்தினால்- விவசாய பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்தோரை ஒருங்கிணைத்து செயல்திட்டம் முன்னெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தினால் ILO நிறுவன நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் உருத்திரீஸ்வரப் புறத்தில் மேற்கொள்ளப்பட்டு வரு கின்ற விவசாயப் பயிற்சி நெறியின் பயிற்சியாளர்களின் ஒருங்கி ணைந்த செயற்பாட்டிற்கான விவசாய உபகரணங்கள் இக்கிராமத்தில் உள்ள கானகன் முன்பள்ளியில் வைத்து 25.01.2005 அன்று வழங்கப்பட்டன.

இப்பயிற்சி நெறி தெரிவுசெய் யப்பட்ட 14-18 வயதிற்குப்பட்ட கல்வி யில் நின்று இடைவிலகிய 10 பயனாளிகளையும், பெண்களை குடும்பத் தலைவர்களாகக் கொண்ட 10 பெண் பயனாளிகளையும் உள்வாங்கி நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது.


இந்நிகழ்வு கிளி.மாவட்ட பொருண்மிய மதியுரைகத்தின் இணைப்பாளர் சி.விஜேந்திரா தலைமையில் 25ஆம் திகதியன்று பி.ப 3.00 மணியளவில் ஆரம்ப மானது. இதில் மங்கலவிளக்கினை பொருண்மிய மதியுரையகத்தின் இயக்குனர் மா.சுந்தரமூர்த்தி, ILO நிறுவன கிளி.மாவட்ட இணைப் பாளர் C.L.R யோசப் ஆகியோர் ஏற்றி வைத்தனர். இதனைத் தொடர்ந்து பொருண்மிய மதியு ரையகத்தின் இயக்குனர் பயிற்சித் திட்டம் தொடர்பான கருத்துக்களை வழங்கினார். அத்துடன் இப்பயிற்சி யினால் எதிர்காலத்தில் இக்கிராமத் தில் ஏற்பட இருக்கின்ற அபிவிருத் திகள் தொடர்பாகவும் இத்திட்டம் ஒரு மாதிரித் திட்டம் எனவும், இனி வருங்காலங்களில் இவ்வாறான பல திட்டங்கள் இன்னும் பல கிராமங் களுக்கு விரிவாக்கம் செய்யப்பட இருப்பதாகவும், இச்சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்டுள்ள பயிற்சி யினை உரிய முறையில் பயன்ப டுத்திக் கொள்ளுமாறும் தெரிவிக் கப்பட்டது. அத்துடன் இங்கு பயிற்சி பெற்று வருகின்ற பயனாளிகளுக் கென ஒரு நிலப்பகுதி ஒதுக்கப் பட்டு இதில் இவர்கள் தொடர்ந்து பயிர்ச்செய்கையினை மேற் கொண்டு ஒரு வருமானத்திட்டத் தினை ஏற்படுத்தக் கூடிய வகை யில் சிறிய விவசாயப்பண்ணை ஒன்று அமைக்கப்பட்டு வருகின் றது.

இதனை அடுத்து இப்பயிற்சி நெறியில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் பயிற்சியாளர் களின் ஒருங்கிணைந்த செயற்பாட் டிற்கென பல விவசாய உபகரணங் களவழங்கப்பட்டன. இரண்டு சில்லு உழவு இயந்திரம் 1, நீர் இறைக்கும் இயந்திரம்- 1, மருந்து தெளி கரு[illegible] 2, மண்வெட்டி -15, பூவாளி [illegible]. இந்நிகழவில் பொருண்மிய மதியுரையக கிளி. மாவட்ட இணைப் பாளர், பொருண்மிய மதியுரைய கத்தின் இயக்குனர், ILO நிறுவன கிளி.மாவட்ட இணைப்பாளர், மன்னார் மாவட்ட பொருண்மிய மதியுரையக இணைப்பாளர் ஆகியோ ருடன் பெருமளவான மக்களும் கலந்து கொண்டனர். (சோ)

## சுனாமியால் பாதிப்புற்ற பகுதிக் கிணறுகளின் தர நிர்ணயம் நவீன முறையில் பரீட்சிப்பு

(அவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள கிணறுகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நீரியல் மற்றும் நீரியல் சுகாதார முகாமைத்துவ பிரிவினர் மூலம் ஏற்ற வகையில் தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி புனர் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்டு சுனாமி அனர்த் தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை துரிதகதியில் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப் பெற்று வருவதாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழக செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பெற்றுள்ளது.



அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது; சுனாமியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அவசர கால இருப்பிடங்களையும் இடைத்தங்கல் முகாம்களையும் அமைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அம்மக்களை நிலையாகத் தங்கவைக்க வேண்டிய அவசியத்தையும் நன்கு உணர்ந்துள்ளது. சுனாமி அனர்த்தப் பகுதியில் மனித வளத்தால் தோண்டப் பெற்ற கிணறுகளை புனர்நிர்மாணம் செய்வது அவசியமானது, அது மக்களை மீண்டும் அப்பகுதிகளில் குடியேற ஊக்குவிக்கும் என தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நன்கு அறிந்துள்ளது தமிழர் புனர்வாழ் வுக் கழகத்தின் நீரியல் மற்றும் சுகாதார முகாமைத்துவ பிரிவிற்கு தேவைகளை கண்டறிந்து சரியான தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அக்கிணறுகளை தூய்மைப்படுத் தும் செயற்பாட்டில் ஈடுபடும் கடமைப்பாடு உண்டு.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பல குழுக்கள் தற்போது மனித வளங்களால் GPS முறையில் (பூகோள ரீதியில் கிடைக்கப பெற்ற தகவல்களை ஒன்றுபடுத்தல்) இடங்களை ஒருமைப் படுத்தும் வகையில் இடம் பெற்றுள்ளது. இவைகளை இலத்திரனியல் வகையில் கணினியில் ஏற்றியுள்ளோம். பாவிக்கப்படப் போகின்ற எல்லாக் கிணறுகளும் சர்வதேச தரத்திலான தொழில்நுட்பங்கள் பாவிக்கப்பட்டு சுகாதார மேற்பார்வையும் செய்யப்பட்ட பின் அவை மதிப்பீடு செய்யப் படுகின்றன. சில குறிப்பிட்ட கிணறுகளின் தரநிர்ணயம் மிக விரிவான முறையில் கையடக்கமான, ஆனால் மிக நவீன மான உபகரணங்களால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. நீரின் தர நிர்ணயத்தை அறியும் காரணிகளான மாசுப்படிவுள்ள அளவு அமிலத்தன்மை (PH) மின் கடத்தும் தன்மை, நுண்ணங்கிகளின் படிவு என்பன பரிசோதிக்கப்பட்டுள்ளன.

நுட்பம் வாய்ந்த இந்த தொழில்நுட்பம் புலம் பெயர்ந்து லண்டனில் வாழும் எமது உறவுகளான நீரியல் பொறியியலா ளர்களால் எமது தமிழர் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் களுக்கு வழங்கப்பட்டது. இந்த வேலைத் திட்டத்தின் எதிர் பார்ப்புக்கள் எல்லாமே பூகோள ரீதியில் கிடைக்கப் பெற்ற தகவல்களை ஒன்று படுத்தல் (GPS) என்பதற்கு அமை வாகவே செயற்படும் பல அரச சார்பற்ற சர்வதேச மனிதாபி மான நிறுவனங்களுடன் இவ்விடயம் தொடர்பாக கலந்துரை யாடல்கள் செய்யப்பட்டுள்ளன. இத்தகவல்கள் கிணறுகளை துப்புரவு செய்து சீர் செய்யும் பணியை துரித மாக்கும் என கூறியுள்ளன. இவ்வகையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின இந்த முன்னெடுப்பு சுனாமி அனர்த்தத்திற்குள்ளாகி இருக் கும் மக்களை துரிதகதியில் தங்கள் சொந்த இடங்களில் குடியேற்ற உதவும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (சோ)

# வலிகாமம் வடக்கு கரையோரப் பகுதிகளில் படையினரால் காவலரண்கள் அமைப்பு

## -கட்டடங்கள் பலவும் அழிப்பு

(நல்லூர்)

**சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக வலிவடக்கு கடற்கரைப்பிரதேசத்தில் அழிக்கப்பட்ட காவல் அரண்களை மீள அமைக்கும் முயற்சியில் கடற்படையினரும் இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர்.**

சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக இடிக்கப்பட்ட கீரிமலைக் கேணியின் பெண்கள் பகுதிக்கான சுவர்க்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே அப்பகுதியில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட மக்களின் வீடுகளின் சுவர்களும் இடிக்கப்பட்டும் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன.

ஏற்கனவே அப்பகுதியில் இருந்து கையாளப்பட்ட வீடுகள் உடைக்கப்பட்டு, காவல் அரண்கள் அமைக்கப்பட்டு இருந்த போதிலும் சுனாமி அனர்த்தத்தின் போது இவைகள் யாவும் கடலுடன் அள்ளுப்பட்டுச் சென்றுள்ளது. இந் நிலையிலேயே மீண்டும் உடைந்த வீடுகளை இடித்து கடற்கரைப் பகுதிகளில் காவலரண்களை அமைக்கும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்தாகும். (41)

# தேசிய வீடமைப்பு உத்தியோகத்தர்களால் அழிவடைந்த வீடுகள் குறித்து மதிப்பீடு

(நல்லூர்)

பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் தேசிய வீடமைப்பு உத்தியோகத்தர்களினால் அழிவடைந்த வீடுகளின் அழிவு சம்பந்தமான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முதற் கட்டமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் கடன் பெற்று நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் ஆகியவற்றின் சேதங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.

இந்நடவடிக்கைக்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்துத் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களும் இப்பிரதேசங்களில் கடமையில் ஈடுபட்டுள்ளதுடன் மேலும் ஆறு தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் மன்னார் மா[illegible]டத்தில் இருந்தும் தற்காலிகமாக அழைக்கப்பட்டுள்ளனர்.இப்பகு[illegible]ளில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட பல நூற்றுக்கு மேற்பட்டவீடுகள் சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக அழிக்கப்பட்டுள்ளதுடன் தேசிய வீடமைப்பு அதிகார சபையில் கடன்பெற்று பொதுமக்களினால் நிர்மாணிக்கப்பட்ட பல நூற்றுக்கு மேற்பட்ட வீடுகளும் அழிக்கப்பட்டுள்ளமையும் குறிப் பிடத்தக்கதாகும். (41)

# ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மாணவர்களுக்கு யுனிசெப் கற்றல் உபகரணங்கள், சீருடை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டின் கரையோரப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு சீருடைத்துணிகளை வழங்க ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் நட்வடிக்கை எடுத்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வியை 4 மாத காலத்துள் கட்டியெழுப்புதல் என்ற திட்டத்தின் கீழ் இவ் உதவியை வழங்க ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (யுனிசெப்) நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இவ்வுதவிகள் வடக்குக் கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சகல மாவட்டங்களைச் சேர்ந்த சிறார்களுக்கும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ் அமைப்பினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு நாடளாவிய ரீதியில் தற்போது கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (33)

# யாழ்-தீவக பிரதான வீதியை புனரமைக்க முன்வருக!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தீவகத்திற்கிடையேயான பிரதான வீதி நீண்டகால மாகப் புனரமைக்கப்படாத நிலையில் இருப்பதனால் அது கடல் நீருள் அமிழ்ந்து விடக்கூடிய அபாயகரமான சூழ்நிலை இருப்பதாக யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் சுட்டிக் காட்டியுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறுப்பிலுள்ள மேற்படி வீதியின் திருத்த வேலைகளில் காட்டப்படும் மெத்தனப் போக்குகளினால் யாழ்.தீவக போக்குவரத்துத் தடைப்படலாம் எனவும் இணையம சுட்டிக்காட்டி விசனத்தைை வெளியிட்டுள்ளது. (33)

# சுனாமியால் வட மராட்சி கிழக்கில் 142 மாணவர்கள் உயிரிழப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலையின் மூர்க்கத் தாக்கத்தினால் சுமார் 142 மாணவர்கள் மரணமடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் உடுத்துறை மகாவித்தியாலயத்தின் ஐம்பது மாணவர்களும், மருதங்கேணி இ.த.க பாடசாலையின் இருபத்தேழு மாணவர்களும், தாளையடி றோ.க.த.க பாடசாலையின் பத்து மாணவர்களும், செம்பியன்பற்று றோ.க.த.க பாடசாலையின் ஒன்பது மாணவர்களும், மாமுனை அ.த.க பாடசாலையின் ஆறு மாணவர் களும், ஆழியவளை சி.சி.த.க பாடசாலையின் இருபத்து மூன்று மாணவர்களும். வெற்றிலைக்கேணி றோ.க. த.க பாடசாலையின் நான்கு மாணவர்களும் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில ஒன்பது மாணவர்களும் கடைக்காடு றோ.க. த.க.பாடசாலையின் நான்கு மாணவர்களும் மரண மடைந்திருக்கின்றனர். (45)

# சுனாமியால் பாதிப்புற்றோருக்கு மணற்காட்டில் 150 வீடுகள் அமைக்க யு.என்.எச்.சி.ஆர் உதவி

சுனாமிப்பேரலையால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் வாழும் மணற்காட்டு மக்களுக்கு மணற்காட்டுப் பிரதேசத்தில் நூற்றைம்பது வீடுகள் அமைக்கும் திட்டமொன்றை யூ.என். எச்.சி.ஆர் நிறுவனத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

ஆறு தூண்கள் கொண்ட சீமெண்ட் இடப்பட்ட தலா ஐம்பதாயிரம் பெறுமதியான சாதாரண அமைப்பிலான நூறறைம்பது வீடுகள் அமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுவரை இருபது வீடுகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளது. தொடர்ந்தும் ஏனைய வீடுகள் இருபது நாட்களுக்குள் நிறைவடைந்து விடும். எனவே உடனடியாகப் பாதிக்கப்பட்ட மக்களை தங்க வைக்கக் கூடியவாறு வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றது.

இவ்வீடமைப்புத்திட்டத்தில் முதற்கட்டமாக வரணி மகாவித்தியாலயம், மந்திகை, புலோலி மெதடிஸ் அ.த.க.பாடசாலை நலன புரி நிலையங்களில் தங்கி இருக்கும் மக்களை குடியமர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வீடமைப்பு வேலைகளைப பார்வையிடக் கடந்த புதனன்று மதியம் 1.30 மணியளவில் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா, இவ்வீடமைப்புத் திட்டத்தின் பொறுப்பாளர் கருணா, ஏனைய போராளிகள் சென்றிருந்தனர். அத்தருணம் மணற்காட்டுப் பிரதேசத்தைப் பார்வையிட வந்திருந்த இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். பிரதிநிதி சாள்ஸ் மார்க், கன்ஸ் மோர்க், வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.தயாவுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டு அப்பிரதேச நிலவரம் பற்றியும், மக்கள் மீளக் குடியமர்தல் தொடர்பாகவும் கேட்டறிந்தார். சுமார் பதினைந்து நிமிடங்கள் இக் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

(கா)

## -வடமராட்சி வடக்கில் சுனாமியால் பாதிப்புற்ற-

# மீனவர்களுக்கு வள்ளங்கள், உபகரணங்களை வழங்க ஜேர்மன் தொண்டமைப்பு நடவடிக்கை

(வடமராட்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு மீனவர்களுக்கு மீன்பிடி வள்ளங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை வழங்கி உதவ ஜேர்மனியதொண்டமைப்பான கியூமெடிக்கா முன்வந்துள்ளது.

வடமராட்சி வடக்கின் தொண்டமனாறு முதல் பருத்தித்துறை கற்கோவளம் வரையிலான கரையோரப் பகுதிகளில் அழிந்து போயுள்ள மீன்பிடிக்கலங்களில் ஒரு பகுதியான 750 வள்ளங்களை வழங்கி உதவ அத்தொண்டமைப்பு முன்வந்துள்ளது.

இதேவேளை அவ்வுதவித் திட்டத்தின் ஓர் அங்கமாக முதற் கட்டமாக 15 படகுகள் நேற்று முன் தினம் வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்களின் சமாசத்திடம் கியூ மெடிக்கா தொண்டமைப்புக் குழுவினாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவை எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை வைபவரீதியாக மீனவசங்கப் பிரதிநிதிகளிடம் தொழில் நடவடிக்கையினை முன்னெடுக்க ஏதுவாக வழங்கப்படவுள்ளது.

இம் முதலாம் கட்ட உதவியினில் 15 மீன்பிடி வள்ளங்களும், அவற்றிற்கான வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் மீன்பிடி வலைகள் என்பவையே வழங்கப்பட்டுள்ளது. மீன்பிடி வள்ளங்கள் அனைத்தும் அழிந்துள்ள நிலையில் இதுவரை மீன்பிடித் தொழிலை முன்னெடுப்பதற்கான அரசின் உதவிகள் ஏதும் மீனவர்களிற்கு கிட்டியிருக்கவில்லையென்ற நிலையில் முதன் முதலாக கியூமெடிக்கா தொண்டமைப்பு உதவிகளை வழங்கியுள்ளதாக மீனவ சங்கசமாச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.(27)

# ஐ.ஓ. எம் நிறுவனம் உதவி

(நல்லூர்)

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் இந்தியாவில் இருந்து வந்து மீளக்குடியேறிய ஆறு குடும்பங்களுக்கு ஐ.ஓ.எம் நிறுவனம் தொழில் செய்வதற்கு வேணடிய உதவிகளை வழங்கியுள்ளது.

ஐந்து குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சுகள், கோழிக்குஞ்சுகளுக்கான உணவுவகைகள் மற்றும் உபகரணங்களையும், ஒரு குடும்பத்திற்கு தேனீர்க்கடை நடத்துவதற்கான உபகரணங்களையும் வழங்கியுள்ளது.

ஏற்கனவே இந்தியாவில் இருந்து வந்து மீளக்குடியேறிய பல குடும்பங்களுக்கு இவ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.(41)

# தற்காலிக வீடமைக்க உதவி

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரனர்த்தங்களால் வீடிழந்த யாழ்.குடாநாட்டின் கரையோரப்பிரதேச மக்களுக்கென தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்க யு.என்.எச்.சி. ஆர். நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுடைய வாழ்வை மீளக்கட்டியெழுப்ப ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகத்தின் (யு.என்.எச்.சி.ஆர் இந் நடவடிக்கைகளுக்கு சேவாலங்கா மற்றும் கியூடெக், கரித்தாஸ் போன்ற அரசசார்பற்ற நிறுவனங்களும் தமது உதவிகளை வழங்கவுள்ளன. (33)

## -போத்துக்கல் வைத்திய நிபுணர்களால்-

# மந்திகை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

மந்திகை ஆதார வைத்தியசாலையில் அவசரசிகிச்சைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. போத்துக்கல் நாட்டைச் சேர்ந்த ஆறு வைத்திய நிபுணர்கள் வருகைதந்து கடந்த 20 ஆம் திகதி மேற்படி அவசரசிகிச்சைப்பிரிவினை ஆரம்பித்து சிகிச்சையளித்து வருகின்றனர். மேற்படி வைத்தியசாலையில் அவசரசிகிச்சைப் பிரிவு இருந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த ஒருவருடகாலமாக தொழில் நுட்பவியலாளர் இன்மையால் இயங்காது இடைநிறுத்தப்பட்டிருந்த X கதிர் பிரிவினையும் ஜேர்மன் நாட்டுவைத்திய நிபுணர்களால் இயங்க வைக்கப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (சு)

# நியாப்-2ஆம் கட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நியாப்திட்டத்தின் இரண்டாம் கட்ட நடவடிக்கையின் கீழ் கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

குளப்புனரமைப்பு, கிராமிய தொழில் மேம்பாடு, உவர்நீர்த்தடுப்பு அணைகள், வீதிப்புனரமைப்பு எனப் பல்வேறு முறைகளிலும் மேற்கொள்ளப்படவுள்ள இத் திட்டத்திற்கான பயணிகள் மற்றும் பிரதேசங்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இத்திட்டங்கள் யாவும் பல மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படவுள்ளன. (33)

20

➡ இரண்டாவது முறையாகவும் சனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் பதவியேற்பு.



பதவியேற்பு நிகழ்வில்

21

➡ அமெரிக்காவில் கன்ஸாஸ் மாகாணத்தில் பயணிகள் விமானம் குடியிருப்புப் பகுதியில் விழுந்து தீப்பிடித்தது. இதில் பயணம் செய்த 5 பயணிகள் பலி.

➡ ஈராக் தலைநகர்பாக்தாத் திற்குத் தெற்கேயுள்ள யுசிபியா கிராமத்தில் ஷியா முஸ்லிம் பிரிவினரின் திருமண விருந்தில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 4 குழந்தைகள் உட்பட 12 பேர் பலி, 25 பேர் காயமடைந்தனர்.

➡ நியூசிலாந்தின் வடக்கே பூமியதிர்ச்சி ஏற்பட்டதில் கட்டடங்கள் அதிர்ந்தன. இது ரிக்டர் அளவில் 5.5 புள்ளியாகப் பதிவாகியுள்ளது.

➡ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் ஷியா முஸ்லிம்களின் பள்ளிவாசல் ஒன்றில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் 14 பேர் பலி,40 பேர் காயம். பள்ளிவாசல் தொழுகையில் ஷியா முஸ்லிம்கள் ஈடுபட்டிருந்தபோது இச்சம்பவம் இடம்பெற்றது.



கார்க்குண்டுத் தாக்குதல்

22

➡ ஈராக்கிய தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்ட 8 சீன தொழிலாளர்கள் விடுதலை.



சீன தொழிலாளர்கள் விடுதலை

➡ மாலைதீவில் பாராளுமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

➡ நேபாள நாட்டின் சோனாபூர் மலைப்பிரதேசத்தில் சென்று கொண்டிருந்த பேருந்து பள்ளத்தில் வீழ்ந்ததில் 42 பயணிகள் பலி, 17இற்கும் மேற்பட்டோர் காயம்.

23

➡ சீனாவில் கடும் பனிப்பொழிவு காரணமாக இரு விபத்துக்கள் நடைபெற்றது. ஜியாங் மென்ட் நகருக்கருகே அதிவேக சாலைப்பகுதியில் 13 கார்கள் மோதியதில் 23பேர் பலி, 68பேர் காயம் மேலும் ஷென் ஜென் ஷான் டோ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 30 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் 4பேர் பலி.

➡ ஈராக்கின் தென்பகுதியான நசீரியாவில் உள்ள அரச மருத்துவ மனையில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் 12 பேர் பலி, பலர் காயம்.

➡ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இடைக்கால அரசின் பிரதமர் இயாத் அலாவியின் அலுவலகத்திற்கருகே இடம் பெற்ற தற்கொலை கார்க்குண்டுத் தாக்குதல் காரணமாக இருவர் பலி, 10 பேர் காயம்.

➡. உக்ரேனின் புதிய சனாதிபதியாக யூசன்சோ பதவியேற்பு. இவ்வைபவம் கியு நகரத்தில் அமைந்துள்ள சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றது.

➡ உக்ரேனின் கெல்வில் நகரில் அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஹொலின்பவலை உக்ரேனிய சனாதிபதி விக்ரர் யுசென்கோ சந்தித்து உரையாடினார்.



கொலின்பவல் சந்திப்பு

24

➡ தெலுங்கு தேசம் எம்.எல்.ஏ பரிதலாரவி ஆந்திரத்தில் ஆனந்தப்பூர் நகரில் சுட்டுக் கொல்லபட்டார். அத்துடன் அவரது கட்சித் தொண்டர் ஒருவரும் கொலை செய்யப்பட்டார். இச்சம்பவமானது கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு வெளியேறியபோது இடம்பெற்றுள்ளது.

➡ ஈராக்கில் பணயக்கைதிகளாக பிடித்து வைத்திருந்த 3 லொறிச்சாரதிகளை அவ்ஸர்காலி தலைமையிலான தீவிர வாதிகள் சுட்டுக்கொலை செய்திருந்தனர். பணத்துக்காக அமெரிக்கர்களுக்கு உதவி செய்தனர் என்று கூறியே இச்சாரதிகள் இவ்வாறு கொலை செய்யப்பட்டனர்.

➡ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் 2 ஈராக்கியர்கள் பலி.

➡ இந்தோனேஷியாவில் 6.2 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் கட்டடங்கள் சேதமடைந்தன.



நில நடுக்கத்தால் பாதிப்பு

➡ ஜேர்மனியில் சர்வதேச தீவிரவாதிகள் 2 பேரைப் பொலிசார் கைது செய்தனர். ஒருவர் ஈராக் நாட்டைச் சேர்ந்த அல்ஹைதா தீவிரவாத அமைப்பின் மூத்த உறுப்பினர். மற்றொருவர் பலஸ்தீன நாட்டைச் சேர்ந்தவர்.

## கடந்த வாரத்தில்

20.01.2005-26.01.2005

25

➡ பாகோன் தீவிலிருந்து தாய்லாந்தின் சுற்றுலா மையமான கோசமுயதீவை நோக்கி நள்ளிரவு சென்ற படகு விபத்துக்குள்ளாகிக் கவிழ்ந்ததில் 7 பேர் பலி , 20 பேர் காணாமற்போயினர்.

➡.காஷ்மீரில் தோடா மாவட்டத்தில் குண்டொன்று வெடித்ததில் அப்பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த 2 சிறுவர்கள் காயமடைந்தனர்.

➡ மகாராஷ்டிர மாநிலம் புனே அருகே சதாரா மாவட்டத்திலுள்ள மந்திரதேவி மலையிலுள்ள மந்திரதேவி கோயிலில் பௌர்ணமி தின விழாக் கொண்டாட்டத்தில் திடீர்ரென்று ஏற்பட்ட தீயினால் நெரிசலில் சிக்கி 350 பேர் பலி, 400 பேர் காயம்.




பரிதாப மரணம்

➡ துருக்கியின் கிழக்குப் பகுதியில் 5.5 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நில நடுக்கத்தினால் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததுடன் இருவர் பலி 22 பேர் காயம்.

➡ ஈகுவடோரில் பசுபிக் கடலோரப் பகுதிகளில் 6.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் பல வீடுகள் சேதமடைந்தன.

26

➡ இந்தியக் குடியரசுதினக் கொண்டாட்டம் இடம்பெற்றது.



குடியரசு தின நிகழ்வில்

➡ வியட்நாமின் தலைநகர் ஹனோயின் தெற்கில் உலங்குவானூர்தி ஒன்று திடீரென விபத்துக்குள்ளானதில் 2 உயர் இராணுவ அதிகாரிகள் உட்பட 16 பேர் பலி.

➡ ஈராக்கின் குர்கிஸ்தான் சனநாயகக் கட்சி அலுவலகம் மீது குண்டுத் தாக்குதல்

➡ ஈராக்கின் மேற்குப் பகுதியில் ஜோர்தானின் எல்லைக்கருகே அமெரிக்க இராணுவப் போக்குவரத்து உலங்கு வானூர்தி ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 31 அமெரிக்கப் படையினர் பலி.

➡ குஜராத் மாநிலம் புஜ் நகரில் 4.5 ரிக்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டது.

➡ அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இடம்பெற்ற ரயில் விபத்தில் 11 பேர் பலி, 200 பேர் படுகாயம். தனிநபர் ஒருவரின் தற்கொலை முயற்சியே இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட நபர் தற்கொலை செய்வதற்காக ஜீப் வண்டியில் சென்று தண்டவாளங்களுக்குக் குறுக்கே வாகனத்தை நிறுத்தியதோடு மரண அச்சத்தில் வாகனத்தை விட்டு இறங்கி ஓடியபோது இரு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டதனால் இவ்விபத்து இடம்பெற்றது.



ரயில் விபத்தின் கோரம்

➡ சேலம் மாவட்டம் தம்பட்டியில் குடியரசு தின விழாவை யொட்டி ஜல்லிக் கட்டு திருவிழா நடைபெற்றவேளை காளை அடக்க முயன்ற 90 பேர் காயம்



காளை அடக்கும்போட்டியில்

➡ அசாம் தலைநகர் கவுசாந்தியில் குடியரசு தினவிழாக் கொண்டாட்டத் தின்போது தீவிரவாதிகள் வைத்த குண்டு வெடித்ததில் 3 பேர் காயம்.

# பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடைய பெண் சட்டத்தரணி மீது நடவடிக்கை

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாளக் குழு உறுப்பினர்களுடன் கையடக்கத் தொலைபேசி மூல மான தொடர்புகளை வைத்திருந்த பெண் சட்டத்தரணியொருவர் தொடர்பாகப் பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளனர். அண்மையில் இந்த சிறைச்சாலைக்குள் சிறைச்சாலை திடீர் சோதனைக் குழு நடத்திய தேடுதல் ஒன்றின் போது, அங்குள்ள பாதாள உறுப்பினர்களி டமிருந்து கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளில் பதிவாகி இருந்த இலக் கம் மற்றும் எஸ்.எம். எஸ். என்பவற்றின் அடிப்படையிலேயே பெண் சட்டத்தரணியின் இரகசிய நடவடிக்கைகள் தெரிய வந்துள் ளன. நீர்கொழும்பு சிறைச்சாலையில் மோச மான கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கூடத்திலும் குடிவரவு, குடியகல்வு சட்டங்களை மீறிய நபர்களை தடுத்து வைத் திருக்கும் சிறைக் கூடத்திலுமிருந்து அண் மையில் 7கையடக்கத் தொலைபேசிகளும் அவற றுக்குரியதுணைக்கருவிகளும்,ஒரு தொகைப் பணமும் மீட்கப்பட்டன. சட்டவிரோதமான முறையில் சிறைச்சாலைக்குள் கடத்தி வரப் பட்டு, வெளியாருடனான தொடர்புகளை ஏற் படுத்தி இருந்த இந்தக் கையடக்கத் தொலை பேசியில் பதிவாகி இருந்த இலக்கங்கள், எஸ்.எம்.எஸ். தகவல்களும் விசேட அனுமதி பெற்று பொலிசாரினால் தகவல் திரட்டப்பட்டு இரகசிய விசாரணைகள் இடம்பெற்றன.

இதன்போது நீர்கொழும்பைச் சேர்ந்த பெண் சட்டத்தரணியொருவர் சிறைச்சாலை யில் உள்ள பாதாளக் குழுக்களுடன் நெருங் கிய தொடர்பில் இருந்து வந்துள்ளது தெரிய வந்திருக்கிறது. சந்தேக நபரான பெண் சட்டத் தரணி பாதாளக் குழு உறுப்பினர்களுடன் கையடக்கத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உள்ளே இருக்கும் ஏனைய கைதிகளை அச்சுறுத்தி நீதிமன்ற வழக் குகளில் அவர்கள் சார்பாகத்தானே ஆஜராக இருப்பதாகவும், வேறு எவரையாவது பிடித்தால் வம்பில் மாட்டி விடு வதாகவும் எச்சரிக்கை விடுத்தும் அவரின் கட்டளைகளை மீறி வேறு சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்ற நடவடிக் கைகளில் ஈடுபட்டவர்களைப் பொய்க் குற் றச்சாட்டு சுமத்தியும் நீதிமன்றத்துக்கும், சிறை ச்சாலைக்கும் கடிதம் அனுப்பி வேறு சிறை களுக்கு மாற்றியும், பாதாள குழு நடவடிக் கைகளுக்கு வெளியில் இருந்து கொண்டு உதவியும், வசதிகளைச் செய்து கொடுத்தும் [illegible], வெளிநாட்டு மற்றும் தமிழ்க் கைதிக ளை அச்சுறுத்தி அதிக பணம கறந்தும் பல் வேறு இரகசிய நடவடிக் கைகளில் ஈடுபட்டு வந்துள்ளதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# இரண்டாவது அலை அடிப்பதற்கிடையில் ஐம்பது பேருக்குமேல் மீட்டுவிட்டோம்

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

**ஆழிப் பேரலைகள் முல்லையில் ஏற்படுத்திய கோரத்தில் சிக்கி உயிர் தப்பிய ஒருவரைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்த பொழுது அவர் ஒரு போராளியைப் பற்றி எங்களிடம் கூறினார். கடல் அலை குமுறி அடித்து வந்துகொண்டிருந்தபொழுது அந்தப் போராளி அதில் சிக்கித் தவித்தவர்களை மீட்டுக்கொண்டிருந்தார். அவரைச் சந்தித்தீர்கள் என்றால் நிறையவே அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளலாம் என்றார். அதன்படி அந்தப் போராளியைச் சந்தித்தோம். அவர் எங்களுடன் பகிர்ந்தவற்றை உங்களுக்காகத் தொடர்கிறோம்**

*கடல் புவி நடுக்கத்தால் எழுந்த பேரலைகள் முல்லைத்தீவைத் தாக்கிய வேளை கடற்கரைக்கு அண்மையில் இருந்த தமிழீழக் கடற்படை அரசியல் அலுவலகத்தில் இருந்து உயிர்தப்பிய அதேவேளை அலையுடன் அடிபட்டுப்போய்க்கொண்டிருந்த பலரை மீட்டு உயிர்காத்த தமிழீழ கடற்படை அரசியல் போராளி அரவிந்தன் தான் நேரில் பார்த்தவற்றையும் தனது மீட்பு அனுபவத்தையும் பகிர்ந்துகொள்கிறார்.*

**அ.லோகீசன்**

**பகுதி-11**

நானும் இன்னும் ஒரு போராளியும் எங்கள் முகாமில் இருந்து வேலைகளைச் செய்து கொண்டிருந்தோம். திடீரென்று கடற்பக்கமாக பெரும் சத்தம் ஒன்று கேட்டது. சத்தத்தைக் கேட்டதும் நாங்கள் வெளியே வந்து பார்த்தோம்.வெளியே வரும்போது ஒன்றும் தெரியவில்லை. மரங்களும் கட்டடங்களும் விழுந்துகொண்டிருந்தன. 'அப்போது கடல் வருகுது "எங்களைக் காப்பாற்றுங்கோ காப்பாற்றுங்கோ" என்று கத்திக்கொண்டு எங்கள் முகாமுக்கு முன்னால் உள்ள வீட்டுக்காரர் ஓடிவந்தார்கள். அவர்கள் சொல்லித் தான் கடல் பெருகிய விடயம் எங்களுக்குத் தெரியும். அவர்களில் நான்கு பேரும் காப்பாற்றுங்கோ காப்பாற்றுங்கோ என்று கத்தினார்கள். என்னால் அவ்வளவு பேரையும் எப்படிக் காப்பாற்ற முடியும். ஒரு அம்மா சின்னப்பிள்ளையை தூக்கி வைத்திருந்தார். தண்ணீர் எங்களடிக்கு வர அந்த அம்மா தனது பிள்ளையை என்னிடம் தந்து தம்பி இந்தப் பிள்ளையைப் பக்குவமாய்க் கொண்டு போய் காப்பாற்று என்றார்.

அவர் பிள்ளையைத் தந்து காப்பாற்று தம்பி என்று சொல்லி முடிக்கவில்லை. தண்ணி என்னை மேலே தூக்கி அடித்துக் கொண்டு போனது. அதோடு அவர்களை நான் பிரிந்துவிட்டேன்.என்னை அலை வேகமாக இழுத்துக்கொண்டு போனது. இப்படி அலை இழுக்கும் எண்டு நான் நினைக்கவேயில்லை. அப்படி மூர்க்கமாக அலை இழுத்தது. அந்த அம்மா என்னிடம் தந்த அவரின் பிள்ளையை அலைபறிப்பது போல இழுத்தது. நான் பிள்ளையை விடவில்லை. என்னுடன் இறுகப்பிடித்து வைத்துக்கொண்டிருந்தேன். அலையுடன் அடிபட்டுப் போய்க் கொண்டிருந்த நான் பிறப்புஇறப்புச் செயலகத்துக்குப் பக்கத்தில் உள்ள பூவரசம் மரத்தை எட்டிப்பிடித்தேன் பெரும் சிரமத்தின் மத்தியில் அதில் ஏறினேன். அந்தப் பிள்ளையைப் பத்திரமாக இருத்தி விட்டு கீழே பார்த்தேன். கடல் வேகமாக வந்துகொண்டிருந்தது. அதற்குள் சிலர் மூழ்கி தத்தளித்துக் கொண்டு மூழ்கி மூழ்கி வந்தனர். இப்படியான காட்சியை நான் ஒருநாளும் கண்டதேயில்லை. அவர்களை நான் எப்படியாவது காப்பாற்றவேண்டும். காப்பாற்றாமல் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. உடனே கீழ் இறங்கி மரத்தைப் பிடித்துக் கொண்டு அவர்களை ஒவ்வொருவராகப் பிடித்து மரத்தில் ஏற்றிவிட்டேன் ஒரு அக் காவாக இருக்க வேண்டும் எனது கைக் கெட்டாத தூரத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தார். அவரின் தலைமையிரில் எட்டிப்பிடித் திழுத்து மரத்தில் ஏற்றினேன். நான் இப்படிச் செய்தேனா என்று கூட இப்போது நம்ப முடியவில்லை. நான் மரத்தில் ஏற்றியவர்கள் எல்லோரும் சற்று முன் என்னிடம் வந்து "காப்பாற்றுங்கள் என்று கூறியவர்கள் தான் அவர்கள்". இப்படியே நான்கு உயிர்களைக் காப்பாற்றி விட்டேன். நாங்கள் ஏறிநின்ற பூவரசமரம் ஒரு 15 அடி உயரம் இருக்கும். அந்த மரத்தில் எங்களின் கால்களைத் தொட்டது போல கடல்நீர் ஓடிக்கொண்டிருந்தது. மரத்தில் ஏறி இருந்தவர்கள் பயத்தால் கதறிக் கொண்டிருந்தனர்.

சிறிது நிமிட நேரத்தில் தண்ணீரின் மட்டம் குறைந்துவிட்டது. உடனடியாக நான் மரத்தில் இருந்து கீழே இறங்கிப் பார்த்தேன். கழுத்தளவு தண்ணீர் நின்றது. அவர்களை மரத்திலிருந்து கீழே இறக்கி புட்டியான இடத்துக்குக் கூட்டிக்கொண்டு போனேன் அவர்களைக் கூட்டிக்கொண்டு போய்க் கொண்டிருக்கும்போது காலுக்குள் சடலங்கள் மிதிபட்டுக்கொண்டிந்தன. தண்ணீர் இருந்தபடியால் படியால் அவை எங்கள் கண்ணுக்குள் தெரியவில்லை. அப்படியே அவர்களைப் பாதுகாப்பாக அனுப்பி விட்டேன்.

அதன்பிறகு யாராவது தப்பியிருப்பவர்களை மீட்போம் என்று திரும்பி வந்தேன். நான் வந்தபோது மூன்று பேர் தங்கள் உறவினரைப் பார்க்கவந்து பேருந்து நிலையத்தில் தவித்துக்கொண்டு நின்றார்கள். அவர்களும் என்னுடன் கூடவே மீட்பு வேலைகளுக்கு வந்தார்கள். நாங்கள் முதலாவது அலை அடித்த கையோடு சமாசக் கட்டடத்தைத் தாண்டி கடலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது கட்டடங்களின் மேலும், மரங்களின் மேலும் சடலங்கள் வௌவால்கள் தொங்கிக் கொண்டிருப்பதுபோல தொங்கிக் கொண்டிருந்தன. அதைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது. எல்லா இடமும் அழுகுரலும் அபாயச்சத்தங்களும் தான் கேட்டுக்கொண்டிருந்தது. இப்படியே கையில் அகப்படுபவர்களை மீட்டு பஸ்நிலையப் புட்டி



யில் கிடத்தினோம். நாங்கள் மீட்ட அனைவரும் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தனர். அவர்களை வெளியால் கொண்டு செல்வதற்கு வாகனவசதிகள் அந்த கண நேரத்தில் கிடைக்கவில்லை. அதனால் நாங்கள் தண்ணீருக்குள் தவித்துக்கொண்டிருந்தவர்களை வெளியே எடுத்துக்கொண்டிருந்தோம்.

நாங்கள் சடலங்கள் எதையும் உடனடியாக மீட்கவே இல்லை. உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தவர்களைத் தான் மீட்டோம். அப்படியே மணல் குடியிருப்புப் பக்கமாக அதாவது அந்தோனியார் கோயில் பக்கமாக வந்து கொண்டிருந்தோம். முதல் அலை அடித்த உடனே இந்தப்பகுதிக்கு வந்தோம். கட்டடங்கள் எல்லாம் இடிந்து போய் இருந்தது. கால்களுக்குள் வீட்டுத் தளபாடங்களும், கல்லுகளும்,மரங்களும் மனித உடல்களும் மிதிபட்டுக்கொண்டிருந்தது. வேதக்கோயிலும் நொருங்கி விழுந்திருந்தது. மொத்தத்தில் முல்லைத்தீவின் தோற்றமே மாறியிருந்தது. நாங்கள் வித்தியாசமான ஒரு உலகத்தில் நிக்கிறோம் என்றுதான் நினைத்தேன்.அதனுள்ளாலும் பெரும் சிரமத்தின் பின் சேச் அடிக்கு வந்தோம். சேச்சுக்குப் பக்கத்தில் வந்தபிறகு பின்னால் திரும்பிப் பார்த்தேன் வயது முதிர்ந்த அம்மா பட்ட மரம் ஒன்றின் உச்சியில் பிடித்துக்கொண்டு நின்றார். உடனடியாகவே ஓடிப்போய் அந்த மரத்தில் ஏறி அம்மாவைக் கீழே இறக்கினோம். அந்த மரம் அம்மாவின் வீட்டின் பின் மூலையில் இருந்தது. அது வீட்டைவிட உயரமான மரம் அம்மாவால் மரத்திலிருந்து இறங்கத் தெரியவில்லை. ஒருகையால் அம்மா வைப்பிடித்துக் கொண்டு ஒருவாறு கீழ இறங்க அம்மா என்னையும் பிடித்துக் கொண்டு மரத்தின் கீழ் இருந்த கிடங்கில் விழுந்துவிட்டார். கடல் வந்து விழுந்த வேகத்தில் தான் அந்தக் கிடங்கு வந்திருக்க வேண்டும். நானும் தாண்டு அந்த அம்மாவும் தாண்டு போய் விட்டோம். ஒரு மாதிரி நான் கரையைப் பிடித்து மேலே வந்து அந்த அம்மாவையும் பிடித்துக் காப்பாற்றி விட்டேன். அம்மாவைக் காப்பாற்றி புட்டிக்குக் கொண்டு வரும் போது அவரின் வீட்டுக்குப் பின்னால் உள்ள ஒரு பெரிய வீட்டில் இருந்து பெண் ஒருவர் " ஐயோ என்ர பிள்ளையைக் காப்பாற்றுங்கோ" என்று பரிதாபமாகக் கதறிக்கொண்டிருந்த குரல் கேட்டது.

உடனே அந்த இடத்துக்குப் போய் வீட்டிற்குள் பார்த்தோம். அந்தக் காட்சி என்னைத் திகைக்க வைத்தது. நான் திகைத்துப் போனேன். முப்பது வயது மதிக்கத்தக்க தாய் அலைவந்தவுடன் தனது பிள்ளையை ஏணையில் கிடத்தி ஏணையின் கயிற்றை இழுத்து பிள்ளையை வீட்டு முகட்டளவுக்கு உயர்த்தியபடி தான் யன்னலில் ஏறி நின்றிருந்தார். நாங்கள் அவர்களையும் மீட்டுக்கொண்டு நெஞ்சளவு தண்ணீருக் குள்ளால் புட்டியை நோக்கி வந்து கொண்டிருந்த போது அம்மா ஒருவர் நெஞ்சளவு தண்ணீருக்குள் அங்கும் இங்குமாகத் தளம்பியவாறு பஸ்நிலையப் புட்டியை நோக்கி நடந்து போய்க்கொண்டிருந்தார். அவா எங்கிருந்து வந்தார் என்பது எனக்குத் தெரியாது. அவரின் கையிலிருந்த குழந்தை கதறி அழுது கொண்டிருந்தது. இந்தக் கோர அலைக்குள் எப்படித் தப்பினார் என்பது எனக்குத் தெரிய வில்லை. ஏதோ ஒருவாறு தப்பிவிட்டார். தனது பிள்ளையைக் காப்பற்ற வேண்டும் என்ற ஓர்மத்தில் அவர் தளம்பியவாறு நடந்து போய்க்கொண்டிருந்தார். சமாச கட்டடத்தின் அருகில் போயிருக்க வேண்டும். திடீரென அவரைக்காணவில்லை. என்ன நடந்திருக்கும் விரைவாக அந்த இடத்துக்கு வந்தோம் தாயும் பிள்ளையுமாகத் தண்ணீருககுள் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்தனர். உடனே அந்த அம்மாவையும் தூக்கி, அவரின் குழந்தையையும் தூக்கிக் கொண்டு பஸ்தரிப்பு நிலையத்துக்குக் கொண்டு போனோம். அந்த அம்மா மயங்கி விட்டார். பிள்ளை யைத் தூக்கிப் பார்த்தேன். உடல் சூடாக இருந்தது. ஆனால் அந்தப் பிஞ்சுப் பாலகனின் உயிர் மட்டும் பிரிந்துவிட்டது. கொடு மையான அந்த அலையிலும் பக்குவமாய் தான் பெற்ற குழந்தையைக் காப்பற்றிக் கொண்டு வந்து கடைசியில் பறி



கொடுத்துவிட்டார்.

இப்படியே மீட்பு வேலைகளைச் செய்து கொண்டு போய்க்கொண்டிருந்தபொழுது வண்ணாங்குளம் பகுதியில் தந்தையார் தனது பிள்ளையை ஒரு பனை மரத்தில் தூக்கி ஏற்றியவாறு பிடித்துக்கொண்டிருந்தார். அவராலும் இயலாமல் இருக்க வேண்டும். அவரை மீட்பதற்காக போய்க் கொண்டிருக்க தண்ணீரும் கூடிக்கொண்டிருந்தது. நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க அந்த அலை அண்ணையை அடிச்சுக் கொண்டு போனது. மரத்தில் இருந்த பிள்ளை தந்தையை அலை இழுத்துக்கொண்டு போக மகன்பார்த்துக் கதறிக் கொண்டிருந்தான். அவன் கதறி என்ன செய்ய முடியும். தண்ணீர் கேட்குமா? இல்லையே நாங்கள் அந்த இழுவைத் தண்ணீருக்குள்ளாலும் போய் மரத்தில் பிடித்திருந்த சின்னப்பிள்ளையை மரத்தில் இருந்து காப்பற்றி தூக்கிக்கொண்டு திரும்பக் கடல் பக்கம் இருந்து தண்ணீரைக் கிழித்துக்கொண்டு ஒரு பூளூஸ்ரார் படகு எங்களுக்கு நேராக வந்தது. நான் அதை பார்த்தவுடனே அந்தப் பிள்ளையுடன் தண்ணீருக்குள் இருந்துவிட்டேன். சிறிது கழித்து மேலே எழும்பிப் பார்த்தபோது அந்தப் படகு எங்கே போனது என்று கூடத் தெரியவில்லை. அந்தளவுக்கு அதன் வேகம் இருந்தது காயமடைந்தவர்களும் சரி பலர் இப்படி படகுகளும் மரங்களும் அடிச்சுத்தான் பாதிப்புக்குள்ளானர்கள். தண்ணீருக்குள் மூழ்கியதால் அந்தப்பிள்ளையும் நானும் தண்ணி குடித்துவிட்டோம் அந்தப் பிள்ளையின் குடும்பமே அழிஞ்சுபோச்சுது. அவர்களின் குடும்பத்தில் தப்பிய ஒரே ஒருவர் இந்தப் பிள்ளை தான். இந்தளவும் ஒரு சில நிமிடங்களில் நடந்துவிட்டது.மரங்களுக்கு மேல் பலர் இருந்தார்கள். அவர்களை எல்லாம் கீழே இறக்கிப் பாதுகாத்தோம். முதலாவது அலை அடித்து இரண்டாவது அலை அடிப்பதற் கிடையில் ஐம்பது பேருக்குமேல் மீட்டுவிட்டோம்.

நாங்கள் அலை அடிச்ச பிறகு இங்கு வந்தபோது பாதை எது கட்டடம் எது எண்டு எதுவுமே தெரியேல்ல. ஆனால் நான் கனகாலமாகப் பழகின இடம் எண்டதால குறிப்பில் தான் போனனான். எங்குமே கடல் தான் தெரிஞ்சது. இதுக்குள்ளால போய் மீட்டுக் கொண்டிருக்கேக்க இரண்டாவது தரம் கடல எழும்பியது. திரும்பிப்பார்த்தேன். எல்லோரும ஓடிக்கொண்டிருந்தார்கள். கடல் இரண்டாவது தரம் எப்படி வந்தது அதன் பிறகு என்ன நடந்தது அடுத்த பகுதியில் தொடர் வோம்.

(தொடரும்)

# பணிநிலை வெற்றிடம்

## முல்லை மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் புதுக்குடியிருப்பு.

01. **பதவி:- களஞ்சியப் பொறுப்பாளர்**

சம்பளக் குறியீட்டு இல:- 202/13

சம்பள அளவுத்திட்டம்:- [5250 - 75X10 - 80X10 - 6800/-] / 63000 - 900X10- 960X10 - 81600

உ. தகைமைகள்:- கூட்டுறவுப் பணியாளர் சேவையில் 12ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்டதுறையில் 02 வருட கால அனுபவம் அல்லது. கூட்டுறவுப் பணியாளர் சேவையில் 13 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 04 வருட அனுபவம்

அல்லது

கூட்டுறவு தராதரப் பத்திரம் (சாதாரணம்) அல்லது க.பொ.த.சா.தரப்பரீட்சையில் கணிதம்,வர்த்த கணிதம்,எண்கணிதம் மற்றும் தமிழ் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களிலான சித்தி அத்துடன் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியொன்றில் 02 வருட அனுபவம்.
வயதெல்லை:- 21 - 45

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

குறிப்பு:- ஆண் பாலார் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

02. **பதவி:- எழுதுனர்**

சம்பளக் குறியீட்டு இலக்கம்:- 302/14

சம்பள அளவுத்திட்டம்:- [5000 - 70X10 - 75X10 - 6450/-] / 6000 - 840X10- 900X10 -77400

உ. தகைமைகள்:- கூட்டுறவுப்பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுனர் பதவியில் 02 வருட கால அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் இதே ஒத்த பதவி யில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம்,வர்த்தக கணிதம், எண்கணிதம், சிங்களம், தமிழ்பாசை உட்பட 05 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
வயதெல்லை:- 21 - 45

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

குறிப்பு :- ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

முக்கிய குறிப்பு:- தட்டெழுத்து கணனிப் பயிற்சி பெற்று அலுவலகக் கடமைகளை மேற்கொள்ளக் கூடியவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும். விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் அனைத்து தகைமைச் சான்றுப் பத்திரங்களின் போட்டோப் பிரதிகள் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 2005.02.15ஆம் திகதிக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் தலைவர், முல்லை மாவட்ட ப.தெ. வ.அ.கூ.சங்கங்களின் இணையம், 09ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**இ.கெங்காதரன், தலைவர்,**
**முல்லை மாவட்ட ப.தெ.வ. இணையம்,**
**புதுக்குடியிருப்பு.**

(சி-11228)

# ரூ1.5 கோடி பெறுமதியான சிகரெட்டுக்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக சிறிலங்காவுக்குக் கொண்டுவரப்பட்ட ஒருதொகுதி சிகரெட்டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. ஒருகோடியே 50இலட்சம் பெறுமதியான இந்த சிகரெட்டுக்கள் அடங்கிய பெட்டிகள் வத்தளை களஞ்சியம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்தன.

போலி ஆவணங்கள் மூலம் இந்த சிகரெட்டுக்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சங்கத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சுனாமி பாதிப்பு நிதிக்காக ரூ3522 மில்லியன் கிடைக்கும்

சுனாமி பாதிப்பு நிதிக்காக இதுவரை 3522 மில்லியன் ரூபா அரசாங்கத்துக்குக் கிடைக்கவுள்ளதாக சிறிலங்கா மத்திய வங்கி தெரிவித்துள்ளது. ஏனைய நாட்டு அரசாங்கங்கள் மற்றும் தனியாரிடமும் இருந்து இந்தத்தொகை நன்கொடையாக கிடைக்கப்பெற்றுள்ளது. இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பவற்றுக்கு கொடையாளர் களால் அனுப்பிவைக்கப்பட்ட 453 மில்லியன் ரூபாவும் இதில் அடங் கும் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# யூரிகளற்ற நீதிமன்றில் ரத்வத்த மீது விசாரணை

(கொழும்பு)

முன்னைநாள் சிறிலங்கா பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முண்ணியின் பாராளுமன்ற உறுப்பினரும், உடத்தலவின்ன படுகொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் குற்றப்பிரேரணை வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி யூரிகளற்ற நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இவ்வழக்கு விசாரணையில் ரத்வத்தவினதும் அவரது இரு புதல்வர்களான லொகான் ரத்வத்த, சானுகரத்வத்த என்பவர்கள் உட்பட 13பேர் புரிந்ததாகக் கூறப்படும் 2001ஆம் ஆண்டு தேர்தல் காலத்திலே 10முஸ்லிம் இளைஞர்களின் படுகொலை செய்த குற்றம் உட்பட 72 குற்றங்களுக்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

அவர் பிரதிப் பாதுகாப்புஅமைச்சை வைத்திருந்த சமயம் புரிந்த அரச அதிகாரத்தைத் தவறான முறையில்பயன் படுத்தியமையும், துஷ்பிரயோகம் செய்தமையும் அவர்மேல் தொடுக்கப்பட்ட குற்றமாகும்.

வரும் பெப்ரவரி 3ஆம் திகதியன்று யூரிகளற்ற நீதிமன்றிலே விசாரிக்கப்படவிருக்கும் இவ் வழக்கை மூன்று உயர்நீதிமன்ற நீதிபதிகள் இருக்கைகளியே இருந்து விசாரிக்கவுள்ளார். அதாவது சனாதிபதியின் ஆசனத்திலே நீதிபதி எரிக்பசநாயக்க விசாரித்து மேல் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிப்பார் அவர்களிடம் வரும் மேலதிக வழக்கு விசாரணைகளை இரண்டு நீதிபதிகளான சுனில் ராஜபக்ஷி, தீபாலி விஜயசுந்தர விசாரணை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


# வேளாண் அறுவடை சூடடிப்புக்கு இலகு முறை அறிமுகம்

THE VANNI AGROTECHS




வேளாண் செய்கையாளர்கள் நீண்ட காலமாக எதிர்கொண்டுள்ள நெல் அறுவடை சூடடிப்புப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப் புதுமையான இணைந்த பொறிகளை இறக்குமதி செய்துள்ளோம். ஏற்கனவே கடந்த சிறுபோகத்தில் மன்னார் ஆண்டான்குளத்தில் பரீட்சார்த்தமாகச் செய்து காட்டி வெற்றி காணப்பட்ட பொறிகள் இரண்டை கிளி.மாவட்டத்தில் அறிமுகம் செய்ய 2005.01.27ஆம் நாள் தருவித்துள்ளோம். பரீட்சார்த்த செய்முறை பூரண வெற்றி காணப்படின் வன்னிப் பிரதேசத்துக்குத் தேவையான இணைந்த பொறிகளை இறக்குமதி செய்யவுள்ளோம்

உங்கள் வயல்களில் சேவையாற்றக் காத்திருக்கும்

**வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம்**

(சி.11229)

கண்டிசாலை, கிளிநொச்சி, தொலைபேசி–0212285745 தொலைநகல்–0212285746

மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாணசபை
போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்அமைப்புத்திட்டம் [CAARP]
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆ.அ.வ." கடன் இலக்கம்:-2043-SRI (SF)

## யாழ். மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் இல: 04

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்டத்தின் (CAARP) ஆகு செலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து ("ஆ,அ.வ") கடன் ஒன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன். கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்கு தகுதி வாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கழிவிலா பிணை பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | JF/CAARP/HS/05 | தெல்லிப்பழை மாவட்ட புற்றுநோய் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகள் விடுதி புனரமைத்தல்-தொகுதி I | M8 | 18,000/= |
| 02. | JF/CAARP/HS/05 | தெல்லிப்பழை மாவட்ட புற்றுநோய் வைத்தியசாலையில் தாதியர் விடுதி புனரமைத்தல் -தொகுதி II | M7 | 40,000/= |
| 03. | JF/CAARP/HS/05 | தெல்லிப்பழை மாவட்ட புற்றுநோய் வைத்தியசாலையில் வாட் இல 11 புனரமைத்தல் -தொகுதி 3 | M7 | 31,000/= |
| 04. | JF/CAARP/HS/05 | தெல்லிப்பழை மாவட்ட புற்றுநோய் வைத்தியசாலையில் சிற்றூழி யர்கள் விடுதி புனரமைத்தல் -தொகுதி 4 | M7 | 40,000/= |
| 05. | JF/CAARP/HS/03 | பருத்தித்துறை அம்பன் மத்திய மருந்தகமும், பிரசவவிடுதியும் புனரமைத்தல் | M7 | 36,000/= |
| 06 | JF/CAARP/ED/17 | யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் 110'x58' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் பூர்த்திசெய்தல் | M7 | 38,000/= |
| 07. | JF/CAARP/ED/18 | யாழ்ப்பாணம் சென் யோன்ஸ் கல்லூரியில் 90'x30' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M7 | 43,000/= |
| 08. | JF/CAARP/ED/22 | சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் 130'x25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M6 | 51,000/= |
| 09. | JF/CAARP/ED/23 | பருத்தித்துறை சென்தோமஸ் ஆர்.சி.ஜி.பாடசாலையில் 90'x25' அளவுடையஇருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M7 | 36,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்த காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு,தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரம் ஒன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக(" இக்ராட் டுடன் M7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன் கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கை யாளர்களிடம் இருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடம் இருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரல் ஒன்று வழங்கப்படவேண்டும்.

IV. "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகள் அல்லது திருப்திகரமற்ற வேலைசெய்த தனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின்கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப்புத் தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

04. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்வி கோர முடியும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுத லான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலதிக விபரங்களை மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர் அலுவலகம்,NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி 021-2223625, தொலைநகல்:021-2225163, மின்னஞ்சல்: necordjf@sltnet.lk

06. ஒப்பந்த ஆவணங்கள் மாசிமாதம் 2ஆம் திகதி முதல் மாசி மாதம் 16ஆம் திகதி வரை முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும். என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம்,திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

08. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் "தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, NECORD கச்சேரி, யாழ்ப்பாணம்"இதற்கு மாசி மாதம் 24ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

09. ஒப்பந்தக்காரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் மாசி மாதம் 14 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

க.கணேஷ்,
தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி-11099)


## கரையோரப் பாதுகாப்பு வலய சட்டத்திற்கு ஜே.வி.பி. எதிர்ப்பு

(கொழும்பு)

அரசாங்கம் கொண்டுவரும் 100 மீற்றர் கரையோரப் பாதுகாப்பு வலய சட்டத்திற்கு ஜே.வி.பி யினர் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் சுனாமியால் பாதிப்பிற்குள்ளான இப் பகுதி மக்களையும் சந்தித்து மேற்படி சட்டத்துக்கு அடிபணிய வேண்டாம் எனவும் பழைய இடங்களில் குடியமருமாறும் கேட்டுள்ளதாக சண்டே லீடர் ஆங்கிலவார இதழ் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக சந்திரிகாவின் கூட்டணி அரசுக்கும் ஜே.பி.பி யிற்கும் இடையிலான விரிசல் தீவிரமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

## நிரந்தர காணி அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலகத்தினரால் நடமாடும் காணி அலுவலக சேவை மூலம் நிரந்தரக்காணி அனுமதிப்பத்திரம் (எல்.டி.ஓ. பொமிற்) மற்றும் காணி அனுமதிப் பத்திரமற்றவர்களுக்கு தற்காலிகக் காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.இதனடிப்படையில் இன்று காலை 9.00 மணிமுதல் 4.00 மணி வரை ஆனைவிழுந்தான் கிராம பொது மண்டபத்தில் வைத்து வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் கிராம மக்களுக்கான காணி நடவடிக்கைகளும், நாளை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை விவேகானந்தநகர் பொது மண்டபத்தில் விவேகானந்தநகர் மக்களுக்கான காணி நடவடிக்கைகளும் எதிர்வரும் 3ஆம்திகதியன்று பாரதிபுரம் கிராமசேவை அலுவலர் அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை பாரதிபுரம் கிருஸ்ணபுரம் கிராம மக்களுக்கான காணி சம்பந்தமான மேற்படி நடவடிக்கைகள் இடம் பெறவுள்ளதென கரைச்சிப் பிரதேச செயலக காணி உத்தியோகஸ்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார்.

(சோ)

## வங்கிப் புத்தகங்களைப் பெறுக!

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்டு இறந்த மக்களுக்கான அவசர கொடுப்பனவான ரூபா 15 ஆயிரம் ரூபா வைப்பிலிடப்பட்ட வங்கிப்புத்தகங்கள் பின்வரும் பெயர்களை உடையவர்கள் கரைதுரைப்பற்று உதவி அரச அதிபர் செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கச்சேரி புனர்வாழ்வு பகுதித் திட்டப் பணிப்பாளர் பிரணவநாதன் கேட்டுக் கொள்கின்றார்.

வண்ணாங்குளக் கிராமத்தைச் சேர்ந்த தெய்வேந்திரம்- அருணா அனுப்பிரியா, தவரெத்தினம், மேரிபிறில்டா-திருஞானசீலன், சிவகுமார்- அன்ரனிபிறிசாந், கஸ்தூரி-வசீகரன், றஜிதா-சிவநேசன், வசீகரன்-அன்ரனி ரவி, கார்த்திகா-சிறிராஜசிங்கம், செபநாயகம்- விஜயறேகன், மேரிதிவ்யா-விக்னேஸ்வரன், சுந்தர்-திலீபன், செலஸ்ரீன்-ஞானராசா,மேரிவித்தியா-விக்கினேஸ்வரன், கஜேந்தினி- தவரெத்தினம்.

மணற்குடியிருப்பு கிராமத்தில் இராசேந்திரம்-கபில்ராஜ், திருச்செல்வம்-வினோத்ஜினோஜன், திருச்செல்வம்-பிரியதர்ஸனா, திருச்செல்வம் -வினோத்நிதர்சன், கீர்த்தனா-தவராசா, தவராசா-ஜெம்ஜன், மரியாம்பிள்ளை-அன்ரனிவின்சன், வினாயகமூர்த்தி-வசந்தாதேவி, ஆகியோரும்.

கள்ளப்பாடு தெற்கு /கள்ளப்பாட்டுக் கிராமத்தில் டினோஜா-ஞானஅமரசீலன்,யோகரத்தினம்-கோபிதர்சன்(கள்ளப்பாடு வடக்கு) வினோசா-யோகரத்தினம், டினிஸ்-நெல்சன் கோயில் குடியிருப்பு, சுயுதா-பாலசுப்பிரமணியம் கோயில் குடியிருப்பு, தர்சினி- நாகராசா உடுப்புக்குளம், கணேசன்-நிதர்சன் 1ஆம் வட்டாரம் முள்ளியவளை, நல்லையா-சங்கீதன் மகிழமோட்டை நெடுங்கேணி.

(20)


## காணவில்லை



மகாலிங்கம் ஜென்சிகா

கற்பகப்பிள்ளையார் கோவிலடி குமுழமுனையை வசிப்பிடமாகக் கொண்ட மகாலிங்கம் ஜென்சிகா என்பவர் கடந்த 26.12.2004 ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின்போது காணாமல் போய்விட்டார். இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் க.மகாலிங்கம் சையிக்கில்கடை குமுழமுனை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

தகவல்:-
(5617) க.மகாலிங்கம்.



இங்கே வெட்டவும்




நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும்

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

மாபெரும் பரிசுப்போட்டி

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்ப்பகுதியை வெட்டிஅதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள். இப்போட்டி பெப்ரவரி மாதம் 1ஆம் திகதிஆரம்பமாகி மறு அறிவித்தல் வரை நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

அம்மன் களஞ்சிய ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

அம்மன் களஞ்சியம்
யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5852,5077

அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளராகுங்கள்!



இப்போட்டியில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

(சி-11148)

வி.பி. முக்கோண கிரிக்கெட்

# அப்துல் ரசாக், அப்ரிடி அதிரடி ஆட்டம்; அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது பாக்.



அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் வி.பி. முக்கோண கிண்ணத்துக்கான. மும்முனை கிரிக்கெட் போட்டியின் நேற்றைய பரபரப்பான ஆட்டத்தில் மூன்று விக்கெட்டுக்களால் அவுஸ்திரேலிய அணியை தோற்கடித்தது பாகிஸ்தான் அணி.

பேர்த்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாட இணங்கியது.

இதன்படி ஆட்டத்தை ஆரம்பித்த அவுஸ்திரேலியா 63 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களை இழந்ததுடன் சொற்ப ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை இழந்தபோதும் நம்பிக்கை நட்சத்திரம் கிளார்க்கின் சிறப்பாட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கிளார்க் ஆட்டமிழக்காது 75 ஓட்டங்களையும், கில்கிறிஸ்ட் 47 ஓட்டங்களையும், பொண்டிங் 29 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் அப்துல்ரசாக் நான்கு விக்கெட்டுக்களையும், நவிட் உல்-ஹசன், மொகட் காலில், சயிட் அப்ரிடி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.





பதிலுக்கு வெற்றி இலக்கு நோக்கி ஆடிய பாகிஸ்தான் 49 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியதுடன் தோல்வியடையும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், ஆடுகளம் நுழைந்த யூசுப் யுஹானாவின் நிதானமான ஆட்டமும், அப்ரிடி, அப்துல் ரசாக் ஆகியோரின் அதிரடி ஆட்டமும் 47.2 ஓவரில் பாகிஸ்தானை 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைய உதவியது.

துடுப்பாட்டத்தில் யுஹானா 72 ஓட்டங்களையும், ரசாக் ஆட்டமிழக்காது 63 ஓட்டங்களையும், அப்ரிடி 13 பந்துகளில் 30 ஓட்டங்களையும் குவித்தனர்.


பந்து வீச்சில் மெக்ராத், கிளெஸ்பி சிறப்பாக பந்து வீசினர். ஹொக், பிரெட்லீ ஆகியோர் ஓட்டங்களை வாரி வழங்கினர்.



மெக்ராத் 27 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், பிரெடலீ 9.2 ஓவர் பந்து வீசி 63 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், ஹொக் 71 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக அப்துல் ரசாக் தெரிவானார்.

நான்காவது ஒரு நாள் போட்டி

# பங்களாதேஷ் அசத்தல் வெற்றி



சிம்பாப்வேக்கு எதிரான நான்காவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி அசத்தல் வெற்றி பெற்றது.இந்த வெற்றியின் மூலம் தொடரை 2-2 என்ற கணக்கில் சமன் செய்தது.

பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் சென்றுள்ள சிம்பாப்வே அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் சிம்பாப்வே 2-1 என்ற முன்னிலை வகித்தது.நான்காவது போட்டிநேற்று முன்தினம் டாக்காவில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ்துடுப்பாடத் தீர்மானித்தது. நவீஸ் இக்பால் 56, காலேத் மசூத் 51, சிறப்பாக ஆட பங்களாதேஷ் அணி கௌரவமான ஓட்டத்தை எட்டியது. 50 ஓவர்களில் இந்த அணி 9விக்கெட் இழப்பிற்கு 247 ஓட்டங்களை எடுத்தது. சிம்பாப்வே தரப்பில் டெய்லர் 3 விக்கெட்டுக்களையும், கொபு 2 விக்கெட்டுக்களையும், ஹொண்டோ, பன்னியங்கார, உட்செயா தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அடுத்து ஆடிய சிம்பாப்வே அணிக்கு மட்சிகென்யரி, ரோஜர்ஸ் ஜோடி நல்ல தொடக்கம் அளித்தது.102 ஓட்டம் சேர்த்த நிலையில் இந்த ஜோடியை பிரித்தார் மன்சூரல் இஸ்லாம் ரானா, மட்சிகென்யரி 50 ஓட்டங்களில் வெளியேறினார். இதன் பின் ரானா, ரபீக் அபார பந்து வீச்சில் தடுமாறிய சிம்பாப்வே 146 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டை பறிகொடுத்தது. இறுதியில் சிம்பாப்வே 50 ஓவர்களில் 189 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்தது. ரபீக், ரானா தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பங்களாதேஷ் அணி 58 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் தொடர் 2-2 என்ற சம நிலையை அடைந்தது.







ஜோர்டானில் உள்ள அம்மான் நகரில் சுனாமி நிதிக்கான கண்காட்சி கால்பந்து போட்டி நடந்தது. இந்தப் போட்டியில் ஜோர்டான் வீரா டஹோர் அல்-பவாப்(இடது), நோர்வே வீரா ரான்வெல்ட் சோமாவிடம் இருந்து பந்தை தட்டிச் செல்ல முற்படுகிறார். இந்தப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

# அணியின் தோல்விக்கு நான் மட்டும் காரணமல்ல

## பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் அக்தர்



பாகிஸ்தான் தோல்விக்கு நான் மட்டும் காரணமல்ல என்று வேகப்பந்து வீச்சாளர் அக்தர் கூறியுள்ளார்.

சர்வதேச அளவில் திறமை மிக்க ஒரு சில வீரர்கள் அடிக்கடி சர்ச்சைகளில் சிக்கிக் கொள்வது வாடிக்கை. அந்த வகையில் பாகிஸ்தான் கிரிக்கெட் நாயகன் அக்தருக்கு சர்ச்சைகளுக்கு மத்தியில் நிரந்தர இடமுண்டு. அவுஸ்திரேலிய பயணத்தின் போது காயம் காரணமாக அவதிப்பட்ட அக்தர் பாதியில் தாயகம் திரும்பினார். இந்திய பயணத்துக்கு முன்பாக அவர் குணமடைய வேண்டும் என்பதற்காக ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், அக்தரின் தனிப்பட்ட சில விடயங்கள் குறித்து இணையத் தளத்தில் படங்கள் வெளியாகி இருக்கிறது. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் பாகிஸ்தான் தோற்றது. அக்தர் உள்ளிட்ட பாகிஸ்தான் பந்து வீச்சாளர்கள் யாரும் சோபிக்கவில்லை. இரவு விடுதியில் அக்தர் ஜாலியாக இருப்பது போன்ற படங்கள் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டதால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கோபம் கொண்டது குறிப்பிடத்தக்கது.


# நடுவர்களை விமர்சித்தார் வோகனுக்கு ஐ.சி.சி. அபராதம்



இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இதன் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. ஏழு ஒரு நாள் போட்டித் தொடரில் முதல் போட்டி நேற்று முதல் ஆரம்ப மானது.


இதற்கிடையே 4ஆவது டெஸ்ட் போட்டியின்போது போதிய வெளிச்சமின்மையால் ஆட்டத்தை நிறுத்திய நடுவர்கள் ஸ்டீவ் பக்னர், அலீம்தர் ஆகியோரை இங்கிலாந்து அணித் தலைவர் வோகன் கடுமையாக விமர்சித்து இருந்தார். இதற்காக ஐ.சி.சி. நடுவர் லொயிட் வோகன் மீது குற்றம் சாட்டியதுடன் ஒன்பது இலட்சம் ரூபா அபராதமும் விதித்தார்.

# முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் ஹைதராபாத் ஓபன் டென்னிஸ்



மார்ட்டினா நவரத்திலோவா, அனஸ்டாசியா மிஸ்கினா, ஸ்வெட்லானா கஸ்னட்சோவா போன்ற டென்னிஸ் நட்சத்திரங்கள் இந்தியா வந்து தூள்கிளப்பப் போகிறார்கள்.

சர்வதேச பெண்கள் டென்னிஸ் தொடர் ஆந்திர மாநிலம், ஹைதராபாத்தில் அடுத்த மாதம் நடக்கிறது. சானியா மிர்சா உள்ளிட்ட முன்னணி வீராங்கனைகள் இதில் பங்கேற்கின்றனர்.



கூடுதல் சிறப்பம்சமாக டென்னிஸ் ஜாம்பவான் வீராங்கனை மார்ட்டினா நவரத்திலோவா, அனஸ்டாசியா மிஸ்கினா, எலினா டெமன்டீவா,ஸ்வெட்லானா கஸ்னட்சோவா, ஜெலினா டோகிக் ஆகியோரை இந்தத் தொடரில் பங்கேற்கச் செய்வதற்கான பணிகள் நடக்கின்றன. இந்தத் தகவலை போட்டி அமைப்பாளர் கிருஷ்ண பூபதி (மகேஸ் பூபதியின் தந்தை) நேற்று முன்தினம் தெரிவித்தார். "நிச்சயம் இந்தப் பட்டியலில் இரு வீராங்கனைகளாவது இந்தத் தொடரில் பங்கேற்பார்கள்" என்கிறார் அவர். அப்படி பங்கேற்கும் பட்சத்தில் பெண்கள் டென்னிஸ் தரவரிசையில் முதல் பத்து இடங்களில் இருக்கும் வீராங்கனைகள் பங்கேற்கும் முதல் இந்தியத் தொடர் என்ற பெருமை ஹைதராபாத் ஓபனுக்கு கிடைக்கும்.

# ஆனந்துக்கு 2-வது இடம்

கோரஸ் செஸ் போட்டி நெதர்லாந்து நாட்டில் நடைபெற்று வருகிறது. இதன் 12ஆவது சுற்று நேற்று முன்தினம் நடந்தது. இந்திய கிராண்ட் மாஸ்டர் ஆனந்த் இந்த சுற்றில் இங்கிலாந்தைச் சேர்ந்த மைக்கேல் ஆடம்சை எதிர்கொண்டார். 42ஆவது காய் நகர்த்தலுக்குப் பிறகு ஆனந்த் வெற்றி பெற்றார்.




# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் ஆடவர் பட்டத்தை சபின் கைப்பற்றினார்



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை ரஷ்யாவின் மராட் சபின் கைப்பற்றினார்.

பரபரப்பாக நடந்த இப்போட்டியில் அவுஸ்திரேலியாவின் லெயிட்டன் ஹெவிட் முதலாவது செட்டை 1-6 என்ற நிலையில் கைப்பற்றி நம்பிக்கை ஏற்படுத்தினார்.



ஆனால், உலகின் முதல் நிலை வீரரான ரோஜர் பெரடரை அரையிறுதிப் போட்டியில் கடுமையாக போராடி வென்ற சபினின் ஆட்டம் இரண்டாவது செட் முதல் ஆக்ரோசமாக அமைந்தது.

இதன் மூலம் அடுத்த செட்களை 6-3, 6-4, 6-4 என்ற நிலையில் கைப்பற்றிய சபின் பட்டத்தைக் கைப்பற்றினார்.

இதனால் சொந்த மண்ணில் அவுஸ் ஓபன் பட்டத்தை வெல்லும் ஹெவிட்டின் கனவு கலைந்தது.



## சிந்தனைக்கு

நாம் தர்மத்திற்காக-தன்மானத்திற்காக-சுதந்திரத்திற்காக- ஆயுதமேந்தி வருகின்றோம். எமது இலட்சியப்பயணமும், அதற்காக நாம் புரிந்து வரும் உன்னத தியாகங்களும் மக்களுக்குப்புரியும்; ஆதலால் தான் அவர்கள் எம்மை அரவணைத்துக் கொள்கின்றார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 31-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

# யாருக்குக் கூறுகிறார்?

"சுனாமி அனர்த்தத்தை அடுத்து இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் சர்வதேச ஆதரவு சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சிகளைத் துரிதப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படவேண்டும" என்ற சிறிலங்காப் பிரதமர் மகிந்தராஜபக்ஷவின் கூற்றுக்கள் வரவேற்கத்தக்கதொன்றே. ஆனால் பிரதமர் மகிந்தராஜபக்ஷ இதனை யாரை மனதில் வைத்துக்கொண்டு கூறினார் என்பதே இங்குள்ள முக்கிய கேள்வியாகும்.

ஏனெனில் சிறிலங்காவிற்கு உதவிவழங்கும் நாடுகள் யாவுமே பிரதமர் மகிந்தராஜபக்ஷ கூறுவதைஆரம்பம் முதலே கூறி வருகின்றன. டோக்கியோ மாநாட்டு நிதி உதவிகளை அந்நாடுகள் நிறுத்திவைத்தமை கூட சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே.

ஆனால் தற்பொழுது 'சுனாமி' பேரழிவை ஏற்படுத்தியுள்ள மையால் உதவிக்கு நிபந்தனைகள்விதிக்க அவர்கள் விரும்ப வில்லையே யொழிய, சுனாமி அனர்த்தத்தினைத் தொடர்ந்து உருவாகக் கூடிய புரிந்துணர்வின் அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்தைகள் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காணப்படவேண்டும் என்றே அவை அபிப்பிராயம் கொண்டுள்ளன.

அடுத்ததாக சமாதானப் 'பேச்சுவார்த்தையின் ஒரு தரப்பான விடுதலைப்புலிகள் இயக்கம் சுனாமியின் பின் இதனையே வலியுறுத்தி வருகின்றது. அதாவது அரசாங்கம் தமிழ்மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தைக்கட்டியெழுப்ப இது ஒரு அரிய சந்தர்ப்பம். இதனை ஆட்சியாளர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சுனாமி அனர்த்தத்தினை வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற நிவாரண உதவிகளைச் சரியான முறையில் பங்கீடு செய்வதன் மூலம் இது சாத்தியமாகும் எனக் கூறிவருகின்றது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும் இத்தகையதொரு வழிமுறைக்குத் தனது ஆதரவை ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளது. நிவாரண உதவிகள் உரிய முறையில் தமிழருக்கும் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதே ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அபிப்பிராயமாகும். ஆகையினால் ஆட்சியாளருக்கு நிதி உதவி செய்தவர்களோ அன்றி எதிர்த்தரப்பு எனக் கருதத்தக்கவர்களோ பிரதமர் மகிந்தராஜபக்ஷவின் கொள்கைக்கு மாறானவர்களாக இல்லை. மாறாக அவருக்கும் மேலாக இதனை வலியுறுத்துபவர்களாகவே உள்ளனர்.

இந்நிலையில் பிரதமர் மகிந்தராஜபக்ஷ இவற்றை யாருக்குக் கூறினார். ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசாங்கத்தில் முக்கிய பங்கு தாரர்களான ஜே.வி.பி.யினருக்குக் கூறினாரா? அன்றி ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்தினதும் நாட்டினதும் தலைவியான சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்குக் கூறினாரா.?

ஏனெனில் இவ் இரு தரப்பினருக்கும் இது கூறப்படவேண்டிய ஆலோசனையே ஆகும். ஏனெனில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே அதிகாரத்தைத் தனது கைகளில் தேக்கி வைத்திருப்பவர். சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படவேண்டுமானால் அவர் மேற்கொள்ளும் முயற்சிகளே வெற்றியளிக்கத் தக்கவையாக இருக்கும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் சந்தேகத்திற்குரியதாகவே உள்ளது. ஏனெனில் அவர் தனது ஆட்சி அதிகாரத்தை நீடித்துக் கொள்வதிலேயே பெரும் அக்கறை காட்டி வருகின்றார். அவர் அதிகாரத்தை நீடிப்பதற்காக நாட்டை யுத்தத்தை நோக்கி வழி நடத்திவரத் தயங்க மாட்டாதவர்.

அடுத்ததாக அரசாங்கத்தின் பங்காளிகளான ஜே.வி.பியினர் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு என்பதையே எதிர்க்கும் நிலையில் உள்ளவர்களும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதை ஆரம்பம் முதலே எதிர்த்து வரும் இவர்கள் சுனாமி அனர்த்தத்தின் பின்னரும் கூடத்தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை. இத்தனைக்கும் இவர்கள் சுனாமியின் பின்னர் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகத்தவர்களுக்கு எதிராகப் போட்டுவந்தகூச்சலைக்கூட நிறுத்தி விட்டனர். ஆனால் தற்பொழுதும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டாலோ, சுனாமி உதவி நிதி பகிர்ந்தளிக்கப்பட்டாலோ ஆட்சியை கவிழ்த்துவிடப் போவதாக எச்சரித்து வருகின்றனர்.

இத்தகையதொரு நிலையில் பிரதமர் மகிந்தராஜபக்ஷவின் அறிவுரைகள் சனாதிபதி சந்திரிகாவிற்கும், ஜே.வி.பியினருக்குமே பொருத்தப்பாடானவையாகும். ஏனெனில் அவர்களே சமாதானப் பாதைக்கு வரவேண்டியவர்களாக உள்ளனர். ஆனால் மகிந்தராஜபக்ஷ எதை மனதிற்கொண்டு இதனைக் கூறியிருப்பினும் சரி நாடு மீட்சி பெற வேண்டுமானால் இதனைத்தவிர வேறு வழியில்லை.

# உசன் பாடசாலை திறப்பு விழாவுக்கு சென்றோர் மீது படையினர் இடையூறு

உசன் இராமநாதன் மகாவித்தியாலய பாடசாலைக் கட்டடத் திறப்பு விழாவுக்கு எதிராக சிறிலங்காப் படையினர் விருந்தினர்களையும், பொதுமக்களையும் துன்புறுத்தியதாகத் தெரியவருகிறது. நேற்று மாலை 3.00 மணியளவில் நடைபெறவிருந்த மேற்படி பாடசாலையின் திறப்பு விழாவிற்கு வருகை தந்திருந்த பாடசாலை விருந்தினர்களையும், பொது மக்களையும் சிறிலங்காப் படையினர் துன்புறுத்தியதாகத் தெரிய வருகிறது. இது குறித்து வெளியில் இருந்து பாடசாலைக்கு வருகை தந்த விருந்தினர்கள் மற்றும் பொது மக்கள் கடும் விசனம் அடைந்திருக் கிறார்கள். அது சம்பந்தமாக பாடசாலைக்கு வருகை தந்த ஆரம்ப பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் நடராசா ஐயர் அவர்களைத் தொடர்பு கொள்ளும் போது பாடசாலைக்கு உபகரணங்கள் கொண்டு வந்த பாரவூர்தியையும் சிறிலங்காப் படையினர் அடாவடித்தனமாக வழி மறித்து தேவையற்ற வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டது, இந்நிகழ்வுக்கு வருகை தந்துள்ள மக்களின் மனங்களை நோக வைக்கும் விதமாக நடந்து கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

# சுனாமி பாதுகாப்பு வலயம் தொடர்பில் — மக்களுக்கு வாழ்விடமமைத்தலில் கவனம் தேவை

## ஐ.நா.ஒருங்கிணைப்பாளர் தெரிவிப்பு

அரசாங்கத்தின் சுனாமி பாதுகாப்பு வலயம் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான நிறுவனம் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. தெற்கில் அரசாங்கம் 100 மீற்றர் தூரத்திற்கு அப்பால் வீடுகளை அமைக்கும் திட்டமொன்றை முன் வைத்துள்ள போதிலும் அதற்கு பாராளுமன்ற அங்கீகாரம் இது வரை கிடைக்கவில்லை.

அரசாங்கத்தின் இந்தத் திட்டம் மீண்டும் இவ்வாறான அனர்த்தம் ஒன்று ஏற்பட்டால் அதிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டது. எனவே இந்தத் திட்டத்தை தாம் எதிர்க்கவில்லை என அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஒருங்கிணைப்பாளர் நீல் ரைட் கருத்து வெளியிட்டுள்ளார். ஆனால் அரசாங்கம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது மக்களின் வாழ்விடங்களை அமைத்துக் கொடுக்கும் விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என தாம் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு காரணமாக பொதுமக்கள் வாழ்விடங்களை இழக்கும் நிலை ஏற்படக்கூடாது. இந்தப் பகுதி மக்களுக்கு இருப்பிடங்கள் உரிய வசதிகளோடு உருவாக்கித் தரப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் நீல் ரைட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சுனாமியால் பாதிப்புற்றோரை பார்வையிட பாப்பரசரின் பிரதிநிதி இலங்கை வருகை

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடவும், புனர்வாழ்வு வேலைகளை நேரில் பார்வையிடவும் என பாப்பரசர் இலங்கைக்கு தனது பிரதிநிதி ஒருவரை அனுப்பி வைக்க இருக்கின்றார் என வத்திக்கான் தெரிவித்துள்ளது.

வத்திக்கான் தர்மஸ்தாபனத்தின் தலைவர் இலங்கைக்கு மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு புதன்கிழமை வருகை தரவுள்ளார். பாதிக்கப்பட்ட குடும்பங்களின் புனர்வாழ்வு வேலைகளுக்கு நாட்டின் சகல மதத்தவர்களும் ஒன்றுபட்டு உதவியளிக்க வேண்டுமென பாப்பரசர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் செல்வந்த நாடுகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு கூடுதலான உதவிகளை வழங்கவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

## அரசசார்பற்ற நிறுவனத்தால்

# இலங்கைக்கு கொண்டுவரப்பட்டஹெலியை மீளக் கொண்டு செல்ல இணக்கம்

சட்ட விரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட உலங்கு வானூர்திகளில் ஒன்றை மீளக் கொண்டு செல்ல அதனை இறக்குமதி செய்த அரச சார்பற்ற அமைப்பு இணங்கியுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனத்தினால் அமெரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட உலங்கு வானூர்தியை மீண்டும் கொண்டு செல்வதற்கு அவர்கள் இணங்கியிருப்பதாக சட்டம், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார். மற்றைய உலங்குவானூர்தி தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். சட்ட விரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட உலங்கு வானூர்திகள் இரண்டை சிறிலங்கா விமானப் படையினர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கடந்த 22ம் திகதி கைப்பற்றினார்கள். வெளிநாட்டு உதவிகளை கொண்டு வரும் போர்வையில் இந்த உலங்கு வானூர்திகள் கொண்டு வரப்பட்டதாக விமானப் படை தெரிவிக்கின்றது. இந்த உலங்கு வானூர்திகள் இரண்டும் கடந்த 18, 19ம் திகதிகளில் பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டன. எனினும் அவற்றை விமான நிலையத்திலிருந்து விடுவிப்பதற்கு விமானப்படை மறுப்புத் தெரிவித்தது. விமானப்படை மேற்கொண்ட விசாரணைகளின் போது இவை அரச சார்பற்ற நிறுவனங்களால் கொண்டு வரப்பட்டமை தெரியவந்துள்ளது. ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையிலேயே இந்த உலங்கு வானூர்திகள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

# ஐ.தே.க. பிரதித்தலைவர் திருகோணமலைக்கு விஜயம்

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் திருகோணமலை மாவட்டத்திற்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

முதலில் வீரநகர், சங்கமித்த, விஜயபுரம், சிலோன் ஜெற்றி, ரி.ரி.ஏ. ஜெற்றி ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டனர். பெரும்பாலான மக்கள் தமக்கு இதுவரை அரச நிவாரணம் முழுமையாக் கிடைக்கவிலை எனக் குறை கூறினர். அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தலா 5,000 ரூபா வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்த போதும் அவை இது வரை வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர். இக்குழுவில் முன்னாள் அமைச்சரான ஏ.எச்.எம்.அஸ்வர், ஜெனரல் வீரசூரிய ஆகியோரும் அடங்கியிருந்தனர். மதியம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் காமினி ரொட்றிகோவுடனான கூட்டம் ஒன்றிலும் இக் குழுவினர் கலந்து கொண்டனர். இதன்போது மக்கள் தெரிவித்த கருத்துக்கள் அங்கு முன்வைக்கப்பட்டன. அதற்கு அரசாங்க அதிபர் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் பிரதேச செயலாளர்கள் மூலமாக சகல நிவாரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலாக அவர்கள் ஒவ்வொருவருக்கும் கூப்பன் அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன என்றார். இக் கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவைகளை கிராம சேவையாளர்கள் சரியான முறையில் வழங்குவதில்லை. சில இடங்களுக்கு அவர்கள் உரிய வேளைகளில் செல்வதுமில்லை எனக் குறை கூறினார். இவ்வாறு சேவை செய்யாத கிராம சேவையாளர்களை இடமாற்றம் செய்யும் அதிகாரம் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். நிவாரணங்கள் மக்களுக்கு வழங்கப்படுவதாக ஊடகங்கள் மூலமாக அறிவிக்கப்படுகின்றது. இதனை தென்பகுதி மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் எமது பகுதி மக்களுக்கு இதுவரை நிவாரணம் சரியாக வழங்கப் படவில்லை. இவற்றிற்கு காரணம் அரசாங்க அதிகாரிகளின் அசமந்தப் போக்கே என்று குற்றம் சாட்டினார்.

# நிவாரணப் பணியில் அரச அதிகாரிகள் முறையற்றுச் செயற்படுகின்றனர்

## ஜே.வி.பி அமைச்சர் குற்றச்சாட்டு

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை என பதில் சமூக சேவைகள் அமைச்சர் சந்திரசேன தெரிவித்துள்ளார். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளில் ஈடு பட்டுள்ள அரச அதிகாரிகளின் முறையற்ற நடவடிக்கைகள் மற்றுமொரு சுனாமியாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். உதவி தேவைப்படும் பெரும்பாலான மக்களுக்கு உரிய உதவிகள் இதுவரை கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். மக்களுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் கையிருப்பில் உள்ளபோதிலும் அவை அந்த மக்களை சென்றடையவில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அரச அதிகாரிகளின் முறையற்ற நடவடிக்கைகள் மற்றும் சிரத்தையற்ற வேலை முறைமைகள் போன்ற காரணங்களினால் நிவாரண நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜே.வி.பி.....

திட்டமிட்ட வகையில் சுதந்திர கட்சியினால் தம்மீதுமேற்கொள்ளப்டும் அதிகார துஷ்பிரயோகமே இது என ஜே.வி.பி. தொழிற் சங்க வட்டாரங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

இந்த விடயம் குறித்து கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்ற ஜே.வி.பி யின் செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இதனை அடுத்து நேற்று முன்தினம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற சுனாமி மீள்கட்டுமான நடவடிக்கை தொடர்பான கூட்டத்தில் ஜே.வி.பியினர் கலந்து கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.(32)

# நிவாரணப்பொருள் கொள்கலனில் 4000 காலணிகள் கண்டுபிடிப்பு

### அதனால் ஏனையவற்றைச் சோதனையிட வேண்டியுள்ளதாம்

வெளிநாட்டு உதவிகள் என்ற போர்வையில் அவற்றுடன் தொடர்பற்ற பொருட்களும் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படுவதால் உதவிப்பொருட்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை கொள்கலன் ஒன்றை திறந்து பார்த்த வேளை பெண்களுக்கான காலணிகள் பல அதில் இருந்தன. அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர்கள், கடற்படையினர், சுங்க அதிகாரிகள் இணைந்து இக்கொள்கலன்களை பரிசோதித்து வருகின்றனர். 40 அடி நீளமான இக்கொள்கலனில் அரிசி உட்பட உணவுப் பொருட்களுடன் சுமார் 4000 காலணிகளும் இருந்தன. இதனால் ஏனைய கொள்கலன்களைப் பரிசோதிக்க வேண்டியுள்ளதென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கூடிய காலத்தை இதில் செலவிட வேண்டியுள்ளதெனவும் இதனால் நிவாரணப் பொருட்களை துரிதமாக பகிர்ந்தளிக்க இடையூறாகவுள்ளதென தெரிவித்தார்.

## சுனாமி...

சொன்னார்கள்? சுனாமியால் பாதிக்கப்ட்ட மக்களுக்கு இவை எதற்கு?

சமூகத்திற்காகத் தொண்டாற்றுவதாகக் கூறிலேபல்களை ஒட்டிக் கொண்டு சில தொண்டர் நிறுவனங்கள் தவறான முறையில் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவார்களேயானால் அவர்களைத் தேடிச் சென்று அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றார் அவர்.

## தமிழ்....

தப்பிச் சென்றுள்ளார்கள். உயிரிழந்தவரின் பணப்பையிலிருந்து சந்தேகத்திற்கிடமான புகைப்படம் ஒன்று பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த புகைப்படத்தைக் கொண்டு இந்த இளைஞர் ஏதாவது அமைப்போடு தொடர்புடையவர் என்று சந்தேகிக்க முடியாது. இருப்பதாக பொலிசார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக மேல் மாகாண வடக்குப்பகுதிக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். இதேவேளை இவரது சடலத்தை அக்கராயன் குளத்தைச் சேர்ந்த உறவினர்கள் பொறுப்பேற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (32)

## அனுதாபத்திற்குரியவர்கள்....

களின் 12வது ஆண்டு நினைவேந்தலுடன், அலையின் அனர்த்தத்தில் உயிரிழந்த உறவுகளின் துயர்சுமந்த நினைவுகளுடன் எழுச்சி நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஒஸ்லோவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தாயகத்திலிருந்து வருகைதந்து, ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் நிதர்சன நிறுவனத்தைச் சேர்ந்தவரும் கவிஞருமான வீரா அவர்கள் சிறப்புரை ஆற்றியிருந்தார். தளபதி கிட்டு அவர்களின் பன்முக ஆற்றல், தமிழீழ விடுதலைக்காக தலைவருடன் தோளோடு தோள் நின்று கிட்டு அவர்கள் ஆற்றிய பணிகள் பற்றிக் குறிப்பிட்ட வீரா, ஆழிப் பேரலையின் தாக்கம் குறித்து பேசியதோடு, சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் ஆழமான நீண்ட உரையினை ஆற்றியிருந்தார். சர்வதேச ஊடகங்களில் இந்த அழிவும், அவலமும் ஒரு செய்தியாகவே நோக்கப்படுகின்றது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில், தமிழீழத் தேசியத்தலைவரைப் பொறுத்த வரையில் இந்த அழிவை சாதாரணமாக நோக்க முடியாது என்றார் அவர். மேலும் கூறுகையில் ஆழிப்பேரலை கடல் அதிர்வினால் உயிர்ப்பலியான தழிழீழ மக்கள், அதனால் பாதிக்கப்பட்ட தமிழீழ மக்கள் எமது போராட்டத்தினைத் தாங்கிய தூண்கள். அதனை வீச்சுடன் வளர்த்தெடுக்க உறுதுணையாய் நின்ற மக்கள். இந்த மக்கள் போராளிகளுக்கு சோறு தந்து அவர்களைக் காத்தவர்கள். எல்லைப்படைகளாக, கிராமியப் படைகளாக போர்க்களங்களில் நின்றவர்கள். காயப்பட்ட போராளிகளைக் காவிச் சென்று காப்பாற்றியவர்கள். குருதி சிந்திய போராளிகளுக்கு தங்கள் குருதியைக் கொடுத்தவர்கள். எனவே உறவுகளை இழந்து தவிக்கும் எமது மக்களை ஆற்றுப்படுத்தி அவர்களின் வாழ்நிலையை மேம்படுத்த வேண்டியவர்கள் நாங்கள். தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் தீர்க்க தரிசனமும் தற் துணிவும் புலம்பெயர் உறவுகளின் உச்சப்பங்களிப்பும் அவர்களின் தன்னம்பிக்கை நிறைந்த பணியும் எமது மக்களின் அவசர மீட்புப்பணிகளை நேர்த்தியாகச் செய்ய வழி ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும் எமது பணி இத்துடன் முடிவடைந்து விடவில்லை. எமது மக்களின் இழப்புகளும் இன்னல்களும் சொல்லில் அடங்காதவை. தமிழீழ விடுதலைப்போராட்டத்தை நசுக்குவதற்கு சிறிலங்கா இனவாத அரச மட்டங்களிலும் சர்வதேச மட்டங்களிலும் திரைமறைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உங்களுக்கு பீதியூட்டுவதற்காக நான் இதைக் கூறவில்லை. தெளிவூட்டுவதற்காகக் கூறுகின்றேன். விழிப்புணர்வோடும் தன்னம்பிக்கையுடனும் நீங்கள் இருக்கவேண்டுமென்பதற்காகவே கூறுகின்றேன். எமது போராட்டத்தின் அடுத்த நகர்வு எவ்வாறானதாக அமையும் என்பதில் தலைவர் தெளிவாக இருக்கின்றார். புலிகள் தெளிவாக இருக்கின்றனர். அது ஒரு பாய்ச்சலாகவே இருக்கும். தமிழினம், உலகில் அனுதாபத்திற்குரிய இனமாக இருப்பதை தலைவர் அவர்கள் ஒருகாலமும் ஏற்றுக்கொண்டதில்லை, ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை. இழப்புகளும் இன்னல்களும் அழிவுகளும் எமது போராட்டத்தில் பாய்ச்சலை ஏற்படுத்தியது என்பதுதான் வரலாறு. கிட்டண்ணாவை பறி கொடுத்தோம். தமிழீழ மக்களின் ஆன்மாவை உலுக்கிய பேரிழப்பு அது. ஆனால் தலைவர் அதை பலமாக மாற்றினார். கிட்டுப்பீரங்கி படையணி, குட்டிசிறி மோட்டார் அணிகளை உருவாக்கி எமது இராணுவ பலத்தை வளர்த்தெடுத்தார். யாழ் இடப்பெயர்வில் ஐந்து லட்சம் மக்கள் ஒரே நாளில் ஏதிலிகளாக்கப்பட்டனர். பெருந்துயரும், நெருக்கடியும் சூழ்ந்த அந்தக் கர்லகட்டத்திலிருந்து நிமிர்வு பெற்று முல்லைத்தீவு படைத்தளம் தகர்க்கப்பட்டது. அதுபோல் இந்தக் கடல் அதிர்வு அனர்த்தத்தையும் பலமாக மாற்றி, ஒரு பாய்ச்சலை ஏற்படுத்தும் நுண்மதித்திறனும், தொலைநோக்குப் பார்வையும் தலைவரிடம் உண்டு. அடுத்த கட்டம் நிச்சயமாகப் பாய்ச்சலாகத்தான் இருக்கும். அது அரசியல் அங்கீகாரம் என்ற பாய்ச்சலா அல்லது எமது வாழ்வை நாமே தீர்மானிக்கின்ற போராட்டம் என்ற பாய்ச்சலா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்களின் கைகளில் அந்தப் பொறுப்பு கொடுக்கப்பட்டு விட்டது. தலைவர் தனது செய்தியாக புலம்பெயர் மக்களுக்கு இதனைக் கூறச் சொன்னார். நெருக்கடிகளைக் கண்டு தன்னம்பிக்கையிழக்க வேண்டாம். அடுத்த கட்டப் பாய்ச்சலுக்கு நான் தயாராகவுள்ளேன், தன்னம்பிக்கையோடு பலமாக இருங்கள். இதுதான் தலைவர் சொன்ன சேதி என்று வீரா தனது உரையில் தெரிவித்தார்.

# என்பு முறிவுகள், மூட்டுகள் தொடர்பான சத்திர சிகிச்சை

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள DR.பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் மாசி மாத நடுப்பகுதியில் மலேசியாவில் இருந்து வருகை தரவிருக்கும் என்பு முறிவுகள், மூட்டுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இன்று தொடக்கம் 3 ஆம் திகதி வரை புதுக்குடியிருப்பு DR. பொன்ன பலம் ஞாபகார்த்த மருத்துவமன யில் வைத்திய கலாநிதி DR.ச பாலன் அவர்களால் இந்நோய்க சம்பந்தப்பட்டவர்களைப் பார் யிடப்பட்டு சத்திர சிகிச்சைக தேவைப்படுபவர்கள் தெரிவுசெ யப்படவுள்ளார்கள். பயன்பெ விரும்பும் நோயாளர்கள் இ அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத் பயன்பெறுமாறும் பணிப்பாள னால் வேண்டப்படுகிறார்கள்.

# நீதிபதி அம்பேபிட்டிய கொலை வழக்கு விசாரணை பெப் 2 இ

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலைதொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 2ஆம் திகதி மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.நீதிபதியின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்து தடுத்துவைக்கப்பட்டுள்ள மொகமட்நவ்பரின் சார்பில் சட்டத்தரணி திரந்தவரலியத்த ஆஜராகவுள்ளார்.ஏற்கனவே சந்தேகநபர் சார்பில் எந்த ஒருசட்டத்தரணியும் ஆஜராகப் போவதில்லை எ அறிவித்திருந்தநிலையில் குற் சாட்டப்பட்டவர் சார்பில் திரந்தவ யவத்த ஆஜரானமைக்கு சட்ட ணிகள் கடும் எதிர்ப்பினை வெ யிட்டிருந்தனர்.

ஏற்கனவே கடந்த 17ஆம் தி இந்த வழக்கு விசாரணை எடுக்கப்பட்ட போது நீதிமன் சட்டத்தரணி திரந்தவரலியத் எதிராக ஏனைய சட்டத்தர கோசம் எழுப்பியமை குறிப் தக்கது

# தமிழீழ வைப்பக முல்லைக் கிளையி சிறுவர்களுக்கான பரிசளிப்பு விழ

2004ஆம் ஆண்டிற்கான சிறுவர்களுக்கான சிறப்பு தேட்ட திட்டம் சிறார் உண்டியல் பரிசளிப்பு விழா நேற்றுக் காலை 10.00 மணிக்கு தமிழீழ வைப்பக முல்லைத்தீவுக் கிளை மேலாளர் திருமதி. மயில்வாகனர் சுமதி அவர்களின் தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது. புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு தமிழீழ வைப்பகக் கிளையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக புதுக்குடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் க.சவுந்தரராஜன் அ ளும், சிறப்பு விருந்தினராக த வைப்பக நடுவப்பணியக ஆ அலுவலர் ரங்கநாதன் அவர் கலந்துகொண்டு சிறப்பித்தன நிகழ்வில் சிறுவர்களுக்கா களையும் பிரதம சிறப்பு வி னர்கள் வழங்கி கௌரவி

## எரிக்குடன்....

பின் போது பாாரளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொரகொட அவரின் செயலர் மகேந்திரன் ஆகியோரும் உடன் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## பாடசாலை...

நிவாரணங்களும் மக்க போதியவை அல்ல எனத் துள்ளார்.

இலங்கைக்கு வருகை அமெரிக்க படையினரின் நே நிறைவு பெற்றுள்ளதாக பிரி தயாரட்ண தெரிவித்துள்ள

# சாவு அறிவித்தல்

## திருமதி. சோதி இராசையா

தமிழீழம் அளவெட்டி வடக்கு கரைவைச்சையைப் பிறப்பிடமாகவும் N York கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சோதி இராசையா அவ 29.01.2005 சனிக்கிழமை ரொறன்ரோவில் காலமானார்.

அன்னார் கதிரித்தம்பி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மக மாணிக்கர் - நாகம்மா தம்பதியினரின் மருமகளும்,

இணுவிலைச் சேர்ந்த திரு. இராசையா அவர்களின் அன்பு மனைவி கோணேஸ்வரி(ஜேர்மனி), சுலோசனா(இந்தியா), சிவகுமார், திலகேஸ விக்கினேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

நன்னித்தம்பியின் சகோதரியும், செல்வராசசிங்கம்(ஜேர் கிருஸ்ணலிங்கம்(இந்தியா), அகிலராணி, ராஜேஸ்வரநாதன், செ (CTR), ஐங்கரன், ஆகியோரின் அன்பு மாமியாரும், முகுந்தன், சி ஆகியோரின் பெரியதாயாரும், காலஞ்சென்ற சின்னத்தங்கம் இராசரத் மற்றும் சின்னத்தம்பி, தில்லையம்பலம், பாலசுப்பிரமணியம், கமலாம் இரகுநாதன் ஆகியோரின் மைத்துனியும்,

மேகலா, அலிசிலா, ஜெகலா, கௌசி (ஜேர்மன்), லக்சுயா, நிரே மகிழா, நிருபா, மதுரா, நிவேதா, நிவேதன், அஜிதன், நிசாந் தன் ஆகியே அன்புப் பேத்தியும், நிசாஸனாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Midland & Sheppard சந்திப்பு இல. Sheppard Ave East, இல் அமைந்துள்ள Ogden Funeral Home 30.01.2005 ஞாயிற்றுக்கிழமை மாலை 3:00 மணி தொடக்கம் மணிவரையும் பார்வைக்காக வைக்கப்பட்டு இன்று 31.01. திங்கட்கிழமை காலை 9:00 மணி தொடக்கம் 9:30 மணிவ பார்வைக்கு வைக்கப்பட்டு Woodbine & Kingston றோட அமைந்துள்ள 256 Kingston Road, St. John Norway Cemetary 10.00 மணி தொடக்கம் 12.00 மணிவரையும் ஈமக்கிரியைகள் நடை தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீகள்.

தொடர்புகளுக்கு: சிவகுமார் (மகன்) - 416 247 8785
ஐங்கரன் (மருமகன்) - 416 451 2357
சிவகுமார் (மருமகள்) - 416 315 6437
செல்வன் (மருமகன் - CTR) - 416 918

(சி.11231)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது